விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in SriLanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 17 சனிக்கிழமை (30.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

# பிரபாகரன் எதிர்த்ததுபோல் விக்னேஸ்வரனும் கடும்போக்கு



## அமைச்சர் தயாசிறி சாடல்

(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் எதிர்ப்புக்களை போன்று விக்னேஸ்வரனும் கடும்போக்குகளை வெளிப்படுத்தி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார். (23-ம் பக்.)

## புதைகுழி தோண்டும் ஒழுங்கு விதி வரைபு

(யாழ்ப்பாணம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தோண்டுவதற்கான நடைமுறைகள் எவையும் இல்லை என்றும் குறித்த நடைமுறைகள் சம்மந்தமாக மனித புதைகுழி தோண்டுவதற்கான ஒழுங்கு விதி ஒன்றை வரைந்துள்ளதாகவும்,

குறித்த ஒழுங்கு விதிகளை

24ஆம் பக்கம் பார்க்க....

## எனக்கு எதிராக விசாரணை இல்லை

(கொழும்பு)

உக்ரைன் அரசாங்கம் எனக்கு எதிராக விசாரணை நடத்தவில்லை என ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

உக்ரைன் கிளர்ச்சி குழு ஒன்றுக்கு உதயங்க ஆயுதங்களை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அவர்

24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை கொல்ல புலிகள் திட்டம்!

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை படுகொலை செய்தது போன்று விடுதலை புலிகளின் ஆதரவு குழுக்கள் மகிந்த ராஜபக்ஷவை குறி வைத்து காத்திருப்பதாக தெரிவித்த பாராளும

23ஆம் பக்கம் பார்க்க....

## பொது எதிரணியினருக்கு தடை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஸ் குணவர்தன, டலஸ் அழகபெரும மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கு நாளை மேதினம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14-ம் திகதி வரை கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள சாலிகா மைதானத்துக்குள் நுழைய முடியாது என கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் இடைக்கால தடை விதித்துள்ளார்.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களையும் குறித்த மைதானத்துக்குள் பிரவேசிப்பதற்

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் இனி கைது செய்யப்பட மாட்டார்கள்

### உறுதி வழங்கினார் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

அரசாங்கத்துடன் நாங்கள் கதைத்ததன் விளைவாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை, பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மீண்டும் கைது செய்தல் இனிமேல் நடக்காது என நம்புகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றை முடித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட இறுதி வரைபு நேற்று


### பிரிட்டன், ஐரோ. ஒன்றியத்திடம் கையளிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட இறுதி வரைபு வெளியிடப்பட்டுள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக பிரித்தானிய அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடமும் கையளிக்கப்பட்டது.

பேரவையின் செயற்பாட்டுக் குழு இணைப்பாளர் அலன் சத்திய

23ஆம் பக்கம் பார்க்க....



## இலங்கையுடனான உறவுகளுக்கு ஒபாமா முக்கியத்துவமளிக்கிறார்

### சமந்தா பவர் தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கையுடனான உறவுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முக்கியத்துவம் அளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற இலங்கை



24ஆம் பக்கம் பார்க்க....

## ஆணின் சடலம் ஆற்றில் மீட்பு



(கரணவாய்)

தொண்டைமானாறு ஆற்றிலிருந்து 47 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு ஆற்றின் பாலத்துக்கு அருகாமையில் சடலம்

24ஆம் பக்கம் பார்க்க....

## தனி மாநிலம் என பிரிவினை முயற்சி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பு, தனி மாநிலம் எனக்கூறி தமிழ், சிங்கள மக்களிடையே மீண்டுமொரு பிரிவினைவாதத்தை அரசியல்வாதிகள் ஏற்படுத்தக் கூடாது என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த கால சம்பவ

23ஆம் பக்கம் பார்க்க....

## மோடியின் அழைப்பில் 13-ம் திகதி மைத்திரி இந்தியா பயணம்

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெறவுள்ள சர்வதேச பௌத்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்கு வருகை தருமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டுள்ளார்.

புதுடில்லியில் எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை இந்த சர்வதேச பௌத்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமர் மோடியுடன் இருதரப்பு பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பொரு

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



## சுப்பையா ஞானம்மா

சரசாலையை பிறப்பிடமாகவும் இல.16, குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சுப்பையாக்கா என அழைக் கப்படுபவருமான சுப்பையா - ஞானம்மா அவர்கள் 29.04.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சுப்பையா அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி, அமரர் லோகநாதன், தேவரத்தினம், பூலோகநாயகி, மங்களேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்றவர்களான ஸ்ரீசந்திரபோஸ், ஸ்ரீஇந்திரன் மற்றும் சிறினிவா சன் (சிறினி), சுபாஜினி (கலா), தவறஞ்சினி (ரதி), ஸ்ரீசுகர்ணமதி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராசா, காலஞ்சென்ற தவதேவரத்தினம், மஞ்சுளா, சறோஜினி, காலஞ்சென்ற தேவகாந் தன், ஜெயக்குமார், சத்தியேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியா ரும், லதா, பிரபா, பாபு, சுயன், மயூரி, இந்திரா, சுதன், சோபனா, தர்சனா, மதன், நிலான், ஜான்சி, மேனுசா, காலஞ்சென்ற கிஜோத், தனுசன், சஜன், தர்சிகா, ஜெனிபர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரசன்னா, பிரதீசன், மகஷ்வின், செயோன், வர்ஷா, திகழினி, யபிசனா, வீஷ்ணுகா, பிரணவன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 01.05.2016 ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று கோரக்கன்கட்டு இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(C-4467)

தகவல் : சிறினிவாசன் (மகன்), மதனதீபன் (பேரன்)

## திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர், வைத்தீஸ்வராக் கல்லூரி - யாழ்ப்பாணம்)



திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி 28.04.2016 வியாழக் கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காரைநகர் பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பரமசாமி (சாமியார், சோதிடர், வைத்தியர்), அன்னமுத்து (ஆசிரியர்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான பொன்னுச்சாமி-மாணிக்கம் தம்பதி களின் அன்புமருமகளும், அமரர் ஜெயசோதி (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பவானி (பிரான்ஸ்), Dr.ஜெயலன் (சுஜீவா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.சந்திரமாலா அவர்களின் மாமியாரும், நவீனா (மருத்துவ இரசாயனத்துறை - பிரான்ஸ்), சிந்தியா (மருத்துவ மாணவி - பிரான்ஸ்) ஆகியோரின் அம்மம்மாவும், யுகன்யா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), கல்கிஜன் ஆகியோரின் அப்பம்மாவும், பஞ்சாட்சரம் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), பத்மநாதன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), சிவகங்கை, அமரர் பரவிரதாதேவி, கனகேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் ஈஸ்வரபாதம் (வல்வெட்டித்துறை), அமரர் பரஞ்சோதி, தம்பிப்பிள்ளை (Rtd CTB), வனதேவா அவுஸ்திரேலியா, Dr.இராஜரட்ணம் (வவுனிக்குளம்), கலைவாணி (அவுஸ்திரேலியா), கணேஸ்வரி (அவுஸ்திரேலியா), சுசிலா (வவுனிக்குளம்), அமரர் மனோன்மணி, புனிதா (பருத்தித்துறை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிவந்தி (அவுஸ்திரேலியா), றிசாந்தி (அவுஸ்திரேலியா), சபேசன் (அவுஸ்திரேலியா), உமா (அவுஸ்திரேலியா), சயந்தன் (அவுஸ்திரேலியா), செல்வபாலன், தவச்செல்வன், தமிழ்ச்செல்வி, தமிழினி, சபேசன், மோகன், தயாழினி (பிரான்ஸ்), காந்திமாலா, பிருந்தா (பிரான்ஸ்), சுகந்தா (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியாரும் அமரர் சுகந்தன், சுஜீவன் (அவுஸ்திரேலியா), சிவராஜி (லண்டன்), சுகந்தினி, சிவரஞ்சி (கொழும்பு பல்கலைக்கழகம்), நிதர்சா (லண்டன்), குமுதா, சதீஸ்குமார், பிரதீப் குமார், முரளிதரன் (இந்தியா) ஆகியோரின் பெரியம்மாவும், தங்கராசா (தங்கப் பழம் - பருத்தித்துறை), தருமலிங்கம், கைலைநாதன் (பிரான்ஸ்), ஞானமலர் ஆகி யோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியில் உள்ள இல்லத்தில் நாளை 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் ஊர்தியில் 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மற்றும் அன்னாரது வீடு ஊடாக காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக ஊர்தியில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மகன் - Dr.ஜெ.ஜெயலன் - சுஜீவா வைத்தியசாலை
(சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
மருத்துவபதிவாளர் - யாழ்நகர் மேற்கு - யாழ் போதனா வைத்தியசாலை)
0775594147

(C-4463)

## திருமதி இராஜேஸ்வரி கோதண்டபாணி



அகில உலகப்புகழ் நாதஸ்வர மாமேதைகள் V.K.கான மூர்த்தி, V.K.பஞ்சமூர்த்தி, தவில் வித்துவான் V.K.விஜய மூர்த்தி, ஆனந்தவள்ளி ஆகியோரின் அன்புத் தாயார் **திருமதி இராஜேஸ்வரி கோதண்டபாணி** 28.04.2016 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் அறியத்தருகின்றோம்.

'அன்னை இல்லம்'
ஸ்ரேசன் றோட், காளிகோவிலடி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
021 222 5768

தகவல் :
குடும்பத்தினர்

(C-4466)

# மகிந்தவின் இராணுவப் பாதுகாப்பு மே முதலாம் திகதியுடன் நீக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பை மே மாதம் 01 ஆம் திகதியின் பின்னர் நீக்கிவிடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி இதனை அறிவித்திருந்தார். அரசியல்வாதிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லையென அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தையடுத்து மகிந்தவின் பாதுகாப்பிலிருந்து இராணுவம் நீக்கப்படும் எனவும் ஜனாதிபதி அறிவித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பை நீக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் அறிவித்தல் விடுத்திருந்த போதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய சந்திப்பொன்றின் போது இராணுவ பாதுகாப்பை நீக்க வேண்டாம் என ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாகிஸ்தான், சீனாவிடமிருந்து போர் விமானங்கள் கொள்வனவு இந்திய எதிர்ப்பால் ஒத்திவைப்பு!

பாகிஸ்தான் மற்றும் சீனாவிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் இந்திய எதிர்ப்புக் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் சீனாவின் போர் விமானங்களுக்குப் பதில் இந்தியப் போர் விமானங்களை கொள்வனவு செய்யுமாறு இந்திய மத்திய அரசின் சார்பில் இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

முன்னைய காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு ஆயுத ரீதியாக எந்தவித உதவிகள் மற்றும் கொடுக்கல்- வாங்கல்கள் மேற்கொள்வதில்லை என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாக வேறு நாடுகளின் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்வதில் இலங்கைக்கு சிக்கல்கள் இருக்கவில்லை.

எனினும் தற்போது பாகிஸ்தான் மற்றும் சீனாவின் போர் விமானங்களுக்குப் பதிலாக இந்தியாவின் தேஜா விமானங்களை கொள்வனவு செய்யுமாறு நெருக்கடி பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானமொன்றின் விலை இந்திய நாணயப்படி 275-300 கோடிகளாகும். எனினும் இதனை விட பாகிஸ்தானிடமிருந்து எட்டு விமானங்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற வன்னி யுத்தத்தின் போது பாகிஸ்தானிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆயுத தளபாடங்களே இராணுவத்தினருக்குப் பேருதவியாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதிகோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்




ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதிகோரியும் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எ.எம்.சிவராமின் படுகொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு கோரியும் ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவராம் மற்றும் கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களுக்காக அரசாங்கத்திடம் நீதி கோரியும் சிவராம் படுகொலை வழக்கை மீள ஆரம்பிக்குமாறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், இலங்கை முஸ்லிம் மீடியா போரம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், இளம் ஊடகவியலாளர் சங்கம், ஊடக ஊழியர் சேவை தொழிற்சங்க சம்மேளனம், ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## யாழில் வீதி அபிவிருத்திக்கென ரூ.134 மில்லியன் நிதிஒதுக்கீடு

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நன் கொடையின் (PSDG) கீழ், யாழ் மாவட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கு 134 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட , மண்டைதீவு லூப் வீதியின் வேலைத் திட்டத்தை நேற்று முன்தினம் வியாழன் மாலை 4.30 மணியளவில் ஆரம்பித்து வைத்த வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அங்கு உரையாற்றுகையில், எமது மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறு வீதி அபிவிருத்திக்கான பல கோரிக்கைகள் இருந்த போதும் மிகவும் அவசியமான தேவைகள் இருக்கின்ற வீதிகளை தெரிவு செய்து தரமாகவும் மக்களுக்கு உகந்ததாகவும் வீதிகளை அமைக்க வேண்டும் என்று வீதி அபிவிருத்தி பணிப்பாளருக்குத் தெரிவித்துள்ளேன் என்றும், அந்த வகையில் யாழ் மாவட்டத்திற்கு ஒதுக் கப்பட்ட 134 மில்லியன் ரூபாய் நிதியில் சுமார் 29 வீதிகள் தெரிவு செய்து புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்விற்கு பங்குத்தந்தை, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன், அமைச்சின் செயலாளர் எஸ்சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்களத் தின் மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வேலணை பிரதேச செயலாளர் திருமதி. சு.தெய்வேந்திரம், வீதி அபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட பிரதம பொறியியலாளர் வி. முரளீ தரன், யாழ்.மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் திருமதி.அபிராமி வித்தியாபரன் மற்றும் கிராம சேவகர், அக்கிராமத்து அமைப்புக் களின் பிரதிநிதிகள், ஆலய சபையினர், கிராமத்து மக் கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9-281)


## காணி சுவீகரிப்பு உரிமை இராணுவத்துக்கு உண்டு

### நாலக தேரர் விசமம்

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு காணிகளை சுவீகரிப்பதற்கான உரிமை இராணுவத்துக்கு உள்ளதாகவும், இது தொடர்பில் யாரும் தலையிடத்தேவையில்லையெனவும் தேசாபிமான பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க எந்த விதமான தார்மீக உரிமையும் இல்லை.

இதனால், கூட்டு எதிர்க் கட்சியினர் இந்த விடயத்துக்கு எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது எனவும் நேற்று முன்தினம் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதுதேரர் இவ்வாறுவேணடுகோள் விடுத்துள்ளார்.(இ-5)



## பாலம் அமைப்பது தொடர்பாக இந்தியாவுடன் பேசப்படவில்லை

### இலங்கை அரசு அறிவிப்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் எந்தப் பேச்சுக்களும் நடத்தவில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அரசாங்க பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ன, இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர் பாக எந்தப் பேச்சுக்களும் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக முறைசார் அல்லது முறைசாரா பேச்சுக்கள் எதுவும் நடத்தப்படவில்லை. இந்தியாவுடன் இதுபற்றிய பேச்சுக்கள் எதற்கும் நாம் செல்லவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளதாக சீன செய்தி நிறுவனமான சின்ஹுவா தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பாக இலங்கையுடன் பேச்சுக்கள் நடததப்பட்டுள்ளதாகவும் இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், இன்னமும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், இந்தியாவின் மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இராணுவம் எதைச் செய்ய வேண்டும் என அரசினால் படிப்படியாக தீர்மானம் எடுக்கப்படும்

## வனஜீவராசிகள் அமைச்சர் யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவம் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என அரசினால் கொள்கை தீர்மானங்கள் படிப்படியாக எடுக்கபடுமென நம்புவதாக வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி சுண்டிக்குளம் பகுதியை தேசிய பூங்காவாக மாற்றும் அபிவிருத்தி வேலைத்திட்ட ஆராய்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி

வன ஜீவராசிகள் அமைச்சின் கீழ் வடக்கில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அத்திட்டங்கள் தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்டதிடட முன் வரைபுகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். அதில் நெடுந்தீவு, சரசாலை, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி திட்டங்களில் சூழலைபாதுகாத்து வைத்திருக்கவும் பொது மக்கள் வருவாயை பெற்றுக்கொள்ளக் கூடியதுமான அபிவிருத்தித்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை முன்னெடுக்கும் போது சில பிரதேசங்கள் சரணாலயங்கள், தேசிய பூங்கா என மாற்றப்பட்டுள்ளது. உதாரணமாக நாகர்கோவில் இயற்கை ஒதுக்கம் எனும் திட்டத்தில் 3 கிராமசேவகர் பிரிவு உள்ளடக்கப்பட்டது.

ஆனால் குறித்தபகுதிகளில் உள்ள பல இடங்கள் பொது மக்களுக்கு சொந்தமானது என அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதையடுத்து 3 கிராமசேவகர் பிரிவையும் தவிர்த்து நாகர்கோவில் கடல் நீரேரி பகுதியை மாத்திரம் குறித்த திட்டத்துக்குள் உள்ளடக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதேபோன்று திட்டங்கள் முன்னெடுக்கப்படமுன்னர் மக்களுடைய காணி, வயல், கடல் ஓரம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் குறித்ததிட்டத்துக்குள் உள்ளடக்கப்படும். அத்துடன் அவை மீளாய்வுசெய்யப்படும்.

இந்த வேலைத்திட்டங்களுக்கு வட மாகாண ஆளுநர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு மேற் குறித்ததிட்டங்கள் பரிசீலிக்கப்படுவது டன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிறைவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகளாக இருக்கும் வனம், நீர்வளம் என்பன அபிவிருத்தி செய்யப்படும் போதுசேதம் அடையலாம் அவற்றை பாதுகாக்க வேண்டியதும் எமது நோக்கம் எனதெரிவித்தார்.

கட்டைக்காடு பகுதியில் வன வள அலுவலகத்திற்காக பொதுமகளின் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில்,

கட்டைக்காடு பகுதி தேசிய பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக இருப்பின் எல்லைகள் மீள் பரிசீலனை செய்யப்படும் அந்த வரைபுகள் வரும் வரை மக்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

கட்டைக்காடு பகுதியில் வன வளபகுதியில் மிகப்பெரிய இராணுவமுகாம் அமைக்கப்பட்டு அந்தப் பகுதியில் விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு இராணுவத்தினர் விடுதிகளை அமைக்க முடியுமா என ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளிக்கும் போது, தேசிய பூங்கா அமைக்கப்படவுள்ள பகுதியில் தான் இராணுவத்தினர் முகாம் இட்டுள்ளார்கள். இராணுவம் உல்லாசவிடுதிகளை அமைத்திருப்பது, சுண்டிக்குளம் பகுதியில் மட்டுமன்றி நாட்டின் வேறு பலபகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்கள் குறித்து கொள்கைப் பிரகடனம் எடுக்கப்பட வேண்டும். இதுகுறித்து அரசாங்கத்துடனும் பேசியிருக்கின்றோம்.

முதலில் விடுவிக்கப் படவேண்டிய காணிகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர், இராணுவம் எப்படியான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும், ஈடுபடக்கூடாது என்பது பற்றிய கொள்கைத் தீர்மானங்கள் படிப்படியாக எடுக்கப்படும் எனதெரிவித்தார். (செ-9)

## புதிய பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு



(கொழும்பு)

புதிய பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று சந்தித்தார்.

நாட்டின் 34 ஆவது பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட பூஜித ஜயசுந்தர கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

இதன்போது ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மாஅதிபருக்கு இடையே சிநேகபூர்வ கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது. (செ-12)

## ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வு நேற்று




(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் நினைவுதினம் நேற்றையதினம் யாழ்.பொது நூலகத்தில் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது முன்னதாக 3.00 மணியளவில் யாழ்.சுப்பிரமணியம் பூங்கா அருகாமையில் ஊடகத்துறை அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்ட நினைவு தூபயில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று,

வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் நினைவாக குறித்த தூபி முன்பாக நினைவு சுடர் ஏற்றப்பட்டது.

இதில் வடக்கு கிழக்கை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்த பிரதிநிதிகள், உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு நினைவு சுடரை ஏற்றியிருந்தனர்.

பின்னர் 3.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நினைவஞ்சலி கூட்டம் ஆரம்பமாகியது.

இதன்போது சிவராமின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர் ஊடகவியலாளர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் மனதவுரிமை செயற்பாட்டாளர்களின் நினைவுரைகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளிற்கு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மற்றும் மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் உட்பட பலரும் கலந்து கொணடிருந்தனர். (செ-4)

## ஆசிரியர் தாக்கியதில் மாணவன் படுகாயம்

### ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் 4ஆம் வகுப்பில் கல்விகற்கும் மாணவனை ஆசிரியர் ஒருவர் கடுமையாக தாக்கி காயப்படுத்தியதாக மாணவனின் பெற்றோரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர்ரி.கனகராஜை தொடர்பு கொண்டுகேட்டபோது,

வடமராட்சி பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் 4 ஆம் வகுப்பில் கல்விகற்கும் மாணவனை கடந்த சில நாட்களாக குறிப்பட்ட வகுப்பு ஆசிரியை ஒருவர் கடுமையாக தாக்கி வந்ததாகவும் கடந்த புதன்கிழமை தடியால் தாக்கியதில் மாணவனின் கன்னத்தில் பெரியகாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாடசாலை அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது அதிபர் பெற்றோரின் முறைப்பாட்டைக்கேட்காது குறித்த சிறுவனை வேறு பாடசாலையில் சேர்க்குமாறு தெரிவித்துள்ளார்.

பின்னர் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும் பொலிஸார் உரிய நடவடிக்கைமேற்கொள்ளவில்லை என்றும் கூறி குறித்த மாணவனின் பெற்றோர் நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான நேரடி விசாரணையை மேற்கொள்வதற்காக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், குறித்த மாணவன் கல்விகற்கும் பாடசாலையின் அதிபர் மற்றும் மாணவனின் வகுப்பு ஆசிரியை ஆகியோரை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வருமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

JAFFNA COLLEGE
LUTHER SELVARAJAH MEMORIAL
OPEN TENNIS - 2016
Conduct By: Jaffna College
Staff Tennis Club
1. Entries for the tournament closes on 10th may 2016.
2. The tournament is open to all.
3. Entry Forms will be available at the Jaffna College Office Vaddukoddai and Jaffna College undergraduate Department office , 464, Hospital Road, Jaffna.
4. The entry fees will be as follows :-
Singles Rs: 150 /= Doubles Rs: 300 /=
President : J.C.S.T Club
(C-4464)

## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் உண்மைகளை மறைத்துவிடும்

## அஸ்கிரிய பீடாதிபதி அரசுக்கு அறிவுரை

(கொழும்பு)

**ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையான தகவல்களை மறைத்து விடும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அஸ்கிரிய பீடத்தின் புதிய மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரரைச் சந்தித்து ஆசி பெறுவதற்காக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க நேற்றுமுன்தினம் கண்டிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது அவருக்கு ஆசி வழங்கிய பின்னர் கருத்து தெரிவித்துள்ள மகா நாயக்கர்,

ஊடகங்களின் சுதந்திரத்தை உறுதிப் படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது நாட்டுக்கும், பொது மக்களுக்கும் உண்மையான தகவல்களை அறிந்து கொள்ள முடியாது போகும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த தகவல் ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க,

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எந்தவித அழுத்தங்களும் இன்றி செயற்படுவதற்கான சுதந்திரமான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அத்துடன் அரச ஊடகங்களும் சமநிலை பேணி நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)


தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும்

**தமிழ் அமுதம்- 04**

**வள்ளுவர் விழா**

இடம்: தமிழ்க் கோட்டம்
(கம்பன் கல்லூரி வளாகம்)
சங்கத்தானை, சாவகச்சேரி
காலம்:01.05.2016ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை பிற்பகல் 5.00 மணி

**நிகழ்வின் நிரல்**

**மங்கல விளக்கேற்றல்**
வழக்கறிஞர் த.வேலாயுதம் தம்பதியினர்
**கடவுள் வாழ்த்து**
திரு. தெ.திருவேரகன் அவர்கள்
**தலைமையுரை**
செல்வி .ரஞ்சனா நவரட்ணம் அவர்கள்
(உதவிப் பிரதேச செயலர்- தென்மராட்சி)
**எழிலுரை**
பொருள்: உள்ளத்து அனையது உயர்வு
ஆற்றுபவர்: திரு. நா.நவராஜ் அவர்கள்

**"விவாத அரங்கு"**

**நடுவர்**
கம்பவாரிதி. இ.ஜெயராஜ் அவர்கள்
**பொருள்:**
என்றும்பொருந்தி நிற்கும்
வள்ளுவ இலக்கணம்

காதல் இலக்கணமே! :திரு.த.நாகேஸ்வரன்
அரச இலக்கணமே! : பேராசிரியர் தி.வேல்நம்பி
துறவு இலக்கணமே! :திரு.ந.விஜயசுந்தரம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொள்வாம்"**



**காணி விற்பனை**

கொடிகாமம் கச்சாய் வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 702 6426 (4341)


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் திருமதி.**
**கமலாம்பிகை இராமசாமி**
**பிறப்பு:- 11.02.1928**
**இறப்பு:- 20.04.2016**

எமது கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி மேனகா மனோகரன் அவர்களின் அன்புத் தாயார் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயர் அடைகின்றோம். ஆழ்ந்த துயரில் இருக்கும் அமரரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.


**யாரிடம் பேசுவது?**

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

**எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.**

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம்.
ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
**(021) 222 8117 / 077 900 8776**
(மு.ப. 9.00 - பி.ப. 1.00)
Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)
*(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*



**கடை விற்பனைக்குண்டு**

ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் மாடிக் கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 910 7242 (4331)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்பலாலிவீதியில்நகரில்இருந்து 1km தொலைவில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:- 077 711 0281 (4328)

**காணி விற்பனைக்கு**

யாழ்.நகரிலிருந்து 3 மைல் தூரத்தில் அல்லைப்பிட்டியில் வெள்ளைக் கடற்கரைக்கு ஓரமாக 45 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் மட்டும் நேரடியாக தொடர்பு கொள்ளவும். 077 910 7242 (4331)


## இராசி பலன்

30.04.2016
(சித்திரை 17, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
அட்டமி பிற்பகல் 4.08 மணிவரை
திருவோணம் பிற்பகல் 5.41 மணிவரை
சுபநேரம் 2.58-4.28 மணிவரை
இராகுகாலம் 8.58-10.28 மணிவரை
நடேசர் அபிஷேகம், அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி,புத சுக் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம், பூசம்<br>காலை 5.32 இற்கு<br>கும்-சந் | | |
| சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்கு ஆளாகுவீர்கள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், அமைதிக் குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, இழுபறியாக இருந்த காரியங்கள் கைகூடும்.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், வேலையாட்களிடம் போராடி வேலையை முடிப்பீர்கள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் புகழ்கூடும், வருங்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைத் தரலாம், வருமானம் திருப்தி தரும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சந்தோசம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், நிதிநிலை உயர்ந்து நிம்மதி காணும் நாள்.

**கன்னி** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மறைமுகப் போட்டிகள் மாறும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

# இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியின் இயல், இசை, நாடகவிழா புதனன்று ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி (நீராவியடியில் யாழ். இந்துக் கல்லூரி அருகில் உள்ள மண்டபம்) முன்னெடுக்கும் மூன்றாவது இயல், இசை, நாடக விழா எதிர்வரும் 04 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை ஐந்து நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

தினமும் மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை நடைபெறவுள்ள நிகழ்வுகளில் யாழ். முன்னணிக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் நாட்டிய நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள், சக்சபோன் கச்சேரி, ஆர்மோனியக் கச்சேரி, சுழலும் சொற்போர் என இயல், இசை, நாடக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிலையத்தினர் வழங்கும் கலை ஆற்றுகைகள் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-29)

# யாழ். சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் ஞானயக்ஞமும் தியானப் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

சின்மயா மிஷனின் நிறுவுனர் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை (08.05.2015-08.05.2016) முன்னிட்டு சின்மயா மிஷன் யாழ்ப்பாணத்தில் மே மாதம் 1 ஆம் திகதி முதல் மேமாதம் 8 ஆம் திகதி வரை சின்மய வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இக்காலப் பகுதியில் மே 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை "வாழ்க்கைப் பாதை; அதுவே கீதை" எனும் தலைப்பில் ஞானயக்ஞம் தினமும் மாலை 6.30 முதல் 7.30 மணி வரையும் தியானப் பயிற்சி தினமும் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரையும் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் நடத்தப்படவுள்ளது. (இ

# பனம் கைப்பணி பயிற்சி புங்குடுதீவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்துக்கான பனம் கைப்பணி பயிற்சி ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் புங்குடுதீவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

"பனம் கைப்பணி கிராமம் - 2016" எனும் தொனிப்பொருளில் பனை அபிவிருத்தி சபையின் யாழ் மாவட்ட இணைப்பாளர் ம.கியூபேட் அன்ரனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புங்குடுதீவு பகுதியை சேர்ந்த 60 பயனாளிகளுக்கு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.


குறித்த பயிற்சி நெறியானது 5 மாத காலம் நடைபெறுவதோடு 90 வீத வரவுஇருப்பின்மூலப்பொருள்கொள்வனவுக்காக ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

பயிற்சி நிறைவில் சிறு சுவடுகள் அமைப்பில் அங்கத்தவாராக இணைக்கப்பட்டு 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டு சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக்கொள்ளப்படும்.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை, வேலணை பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், பனை அபிவிருத்தி சபை யாழ் மாவட்ட முகாமையாளர் எம்.பி.லோகநாதன், பனை அபிவிருத்திசபை முகாமையாளர் (விரிவாக்கம்) கா.கோபாலகிருஷ்ணன், சிறு சுவடுகள் அமைப்பின் தலைவி த.பவானி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# வடக்கு தீர்வுத்திட்டம் அரசிடம் கையளிப்பு

## இன்று சம்பந்தனிடம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த தீர்வுத்திட்டத்தின் முன்மொழிவுகளை சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது. இந்த கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போதிலும் இது தொடர்பில் அவைத்தலைவர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு முன்னரே தெரியப்படுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தீர்வுத் திட்ட முன்மொழிவுகள் இன்றைய தினம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனிடம் யாழ். பொது நூலகத்தில் வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர், அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரினால் உத்தியோகபூர்வாக கையளிக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடமாகாண மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள், அபிலாஷைகளை புதிய அரசியலமைப்பில் உள்ளீர்த்துக் கொள்வதற்காக வடமாகாண சபையினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் முன்மொழிவுகளுக்கு வட மாகாண சபை கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற 51 ஆவது கூட்டத்தொடரின் போது ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்த தீர்வு திட்டத்தில் வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு மாநிலமும் அந்த மாநிலத்திற்கு அதி உச்ச அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை அந்த தீர்வுத் திட்டம் முன்மொழிந்திருந்தது. இதற்கு தென்னிலங்கை இனவாத சக்திகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருவதோடு, வடக்கு முதலமைச்சரினை கைது செய்ய வேண்டும் என்ற கோசங்களையும் எழுப்பி வருகின்றன.

இந்நிலையில் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியிலுள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவை நேற்று முன்தினம் சந்தித்த வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா ஆகியோர் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டத்தை அவரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளனர். வட மாகாண சபையானது ஒரு நிறுவனம் என்ற வகையில், நெறிமுறையின் பிரகாரம் அதன் முன்மொழிவுகளை அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவர் என்ற வகையில்,

சபாநாயகருக்கோ அல்லது 21 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல் குழுவின் தலைவரான பிரதமருக்கோ முதலில் அனுப்பி வைக்க வேண்டும் என்ற ரீதியிலேயே நேற்று முன்தினம் சபாநாயகரை சந்தித்து மேற்படி முன்மொழிவுகளை கையளித்திருப்பதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் முதலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனிடம் முதலில் கையளிப்பது என்று சபையில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் ஏன் அவசர அவசரமாக நேற்று முன்தினம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்பது குறித்து காரணங்கள்எதுவும்கூறப்படவில்லை. (இ-4)

# வீதித்திருத்தத்திற்கென 90 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, கிழக்கு, வெற்றிலைக்கேணி, வீரகத்தியர் கொடுவாய்ப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தினூடாக மாரிகாலத்தில் மழை நீர் வழிந்து ஓடாமல் தேங்கி நிற்பதனால், வீதியோரப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்படுவதாக இப் பகுதி பொதுமக்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கிய முறைப்பாடுகளை அடுத்து இவ் வீதி திருத்துவதற்காக சுமார் 90 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவது, அமைத்துக் காணப்படுகின்ற பாலத்திற்கு இருபக்கமும், மேலதிகமாக ஒவ்வொரு பாலமும் பாலத்தில் இருந்து கிழக்கு மேற்கு நீளமாக ,சுமார் 300 மீற்றர் தூரம் வரைக்கும் மழை நீர் தேங்கி நிற்காதவாறு வீதி உயரமாக செப்பனிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதியின் திருத்த வேலையின் முதற் கட்ட நடவடிக்கை இன்றைய தினம், வடமராட்சி கிழக்கு இலங்கை தமிழரசு கட்சியின் இணைப்பாளர் செழியன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை மீன்பிடி, போக்குவரத்து , கிராமிய ,வர்த்தக ,வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் அவரது செயலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விச் சமூகத்தினர் என இந் நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். (இ-64)

# மோட்டார் சைக்கிள் மோதி 5வயதுச்சிறுமி படுகாயம்

அச்சுவேலியில் தந்தையுடன் கடைக்குச் சென்ற சிறுமியின் மீது , மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுமி படுகாயமுற்ற நிலையில் அச்சு வலி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மேற்படி விபத்து நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு அச்சுவேலிச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

மேலும் இவ் விபத்து சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறைச் சேர்ந்த ராஜ்குமார்-தசானி (வயது-5) எனும் சிறுமி தந்தையுடன் கடைக்குச்சென்றுள்ளார். பொருட்களை கடையில் வாங்கிவிட்டு எதிர்ப் பக்கத்திலுள்ள வாகனத்தை எடுப்பதற்காக வீதியைக் கடந்து செல்கையில் சிறுமியும் பின்னால் சென்ற வேளை எதிர்பாராத விதமாக மோட்டார் சைக்கிள் சிறுமியை மோதிவிட்டு சென்றுள்ளது.

சிறுமி படுகாய முற்ற நிலையில் அச்சுவேலி வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார். அச்சுவேலி பொலிஸார் மேற்படி விபத்துச் சம்பவம் பற்றி தீவிர விசா ரணை நடத்தி வருகின்றனர். (இ-52)



புதுவருடத்தை முன்னிட்டு யாழ்.தொல்லியல் திணைக்களத்தினால் பாரம்பரிய கலாசார விளையாட்டு நிகழ்வுகள்நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை யாழ்.கோட்டையில் நடைபெற்றது. தொல்லியல் திணைக்கள அரச உதவிப் பணிப்பாளர் பாலசூரிய தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மத்திய கலாசார ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தொல்லியல் திணைக்கள பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பாரம்பரிய கலை, கலாசார விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். போருக்கு பின்னரான காலப்பகுதியில் சமாதான சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் முதன் முறையாக யாழ்ப்பாணம் கோட்டை பகுதியில் குறித்த நிகழ்வை நடத்தியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (படம்:-கு.கஜரூபன்)

# சிறிய நடுத்தரத் தொழில் முயற்சிகளை பதிவு செய்தல்

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை விருத்தி செய்தல் மற்றும் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல்செயற்பாட்டிற்கமைய இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு) தலைவினால் நாடுபூராகவும் உள்ள சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளரிடமிருந்து அவர்களது தேவைப்பாடுகளை அறிந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை மாவட்ட அலுவலகங்கள் ரீதியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது செயற்படுகின்ற தொழில்முயற்சியாயின் அத்தொழில்முயற்சியாளர் சந்தைப்படுத்தல் விரிவாக்கம், தொழில் நுட்ப விருத்தி, உற்பத்திச் செலவை குறைத்தலூடாக இலாபத்தை அதிகரித்தல், முகாமைத்துவ தந்திரோபாயங்கள், பொருள் விருத்தி மற்றும் உற்பத்தி திறன் விருத்தி போன்ற சேவைகளையும், புதிய தொழில்முயற்சியாயின் அத்தொழில்முயற்சியாளர் தமக்கான நவீனத்துவ தொழில்யோசனை, தொழில்நுட்ப உதவி, வியாபார நிறுவன ஒழுங்கமைப்பு, நிதி தொடர்பான உதவிகள், சந்தை மற்றும் கைத்தொழில் தகவல் பெறல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாயின் (வருடாந்த வருமானம் 16- 750 மில்லியன் வரை வேலை வாய்ப்பு- 11 - 300 வரை) கொண்டிருத்தல். மற்றும் புதிய தொழில் முயற்சியாயின் அதற்கான முதலீடு 5- 80 மில்லியன் ரூபா வரை இருத்தல் வேண்டும்.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட செயலகத்தின் புதிய நிர்வாக கட்டடத்தின் 2 ஆவது மாடியில் இயங்குகின்ற யாழ்மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையில் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடை யோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 30.04.2016 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மாவட்ட உதவி பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 222 1676) அவர்களிடமிருந்து மேலதிக தக்வல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04.விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 30.04.2016 முதல் 20.05.2016 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 20.05.2016 ஆம் திகதியன்று பிற்பகல் 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 20.05.2016 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும்.

06.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணைப் பொறுப்பு 120 நாட்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

08.Prebid Meeting 13.05.2016 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/DDMCU/ FMP/2016/01 | காரைநகர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சக்கலா வோடை வெள்ளவாய்க்கால் மேம்படுத்தல் | 2.63 | 03 | C8 | 26,700.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP/2016/02 | ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சூரியாவத் தைப் பகுதியில் வடிகால் தொகுதியை மேம்படுத்தல் | 2.64 | 03 | C8 | 27,800.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP/2016/03 | சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கட்டுடை ஐந்து கண் மதகு புனரமைத்தல் | 2.61 | 03 | C8 | 26,100.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP/2016/04 | வேலணை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கேணிக் கரைக் குளத்திலிருந்து வேணன்குளத்திற்கு இடைப்பட்ட பகுதியில் வடிகால் தொகுதியினை மேம்படுத்தல் | 2.60 | 03 | C8 | 26,200.00 | 1000.00 |

(C-4462)

**நா.வேதநாயகன், அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.**


தெய்வீக மணம் கமழும் திருப்தியான ஐந்து வாசனைகளில் இல்லங்களில். கோவில்களில் பாவனைக்கு தெரிவு செய்யுங்கள். மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். யாழ்.நகரில் முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

விபரங்களுக்கு
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்.
303, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

(C-4455)





# சிறைச்சாலை அதிகாரிகள் பலருக்கு உயிரச்சுறுத்தல்

(கொழும்பு)

சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளின் நடவடிக் கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக புதிய சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புதிதாக கடமைகளை பொறுப்பேற்றுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான்சந்திரஜித், ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது பெருமளவான சிறைச்சாலை அதிகாரிகள், பாரிய உயிர் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக பாதாள உலகக் குழுவினர், போதைவஸ்து கடத்தல்காரர்களின் அச்சுறுத்தல்களுக்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

ஏற்கனவே போதை வஸ்து கடத்தல்காரரான வெலே சுதாவுடன் தொடர்புடைய 17 சிறைச்சாலை அதிகாரிகள் இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்து ஊழல் அற்ற வகையில் சிறைச்சாலை நிர்வாகத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையாளர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் மாத்திரம் 60 வீதமான கைதிகள் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் என்பது தெரிய வந்துள்ளது என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா:11
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L கனடா PR
தொ.இ: B/4297

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 68 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/4299

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 16
உயரம்: 183cm
தகைமை/தொழில்:பிரான்ஸ் குடியுரிமை
தொ.இ: B/4300

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 24செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/வங்கியாளர்
தொ.இ: B/851

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 16செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BBA/கணக்காளர்
தொ.இ: G/5146

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 40செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5154

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 60செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5160


பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 53செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5164

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## கொண்டைமடு காட்டுப் பகுதியில்

# சூட்சுமமான முறையில் நிலத்தின் கீழ் இயங்கிய கசிப்பு தயாரித்த இடம் பொலிஸாரிடம் சிக்கியது

## பெருந்தொகையான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதானார்



முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத் திற்குட்பட்ட கொண்டை மடு காட்டுப் பகுதியில் மிகவும் சூட்சுமமானமுறையில் இயங்கி வந்த கசிப்பு தயாரித்த இடம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சிக்கி யது.

அத்துடன் கசிப்பு உற்பத் திக்கு பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான உப கரணங்கள் கைப்பற்றப்பட்ட துடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் காலை 8 மணிக்கு இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முள்ளியவளை பொலி ஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதல் நட வடிக்கையில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் சிக்கியது.

இதன்போது அங்கி ருந்து சுமார் ஆயிரம் லீற்றர் கசிப்பு உற்பத்திக்கு தேவைப் படும் 120 லீற்றர் ஸ்பிரிட் உட் பட பெரும் தொகையான பொருட்கள் மீட்கப்பட்டன.

அத்துடன் இந்த உற்பத்தி நிலையமானது நிலக் கீழ் பங்கர் அமைத்து மிகவும் பாதுகாப்பான முறையில் இயங்கி வந்தமை குறிப்பிடத் தக்கது.

குறித்த சுற்றி வளைப் பின் போது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதுடன் அதனுடன் தொடர் புடைய பலர் தப்பி ஓடியுள்ள துடன் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் முள்ளியவளைப் பொலி ஸார் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்பொலிஸ் நிலையத் திற்குட்பட்ட நாவற் காட்டுப் காட்டுப் பகுதியில் கடந்த 25 ஆம் திகதியன்று 175 லீற்றர் கோடாவும், கசி ப்பு உற்பத்திக்கு பயன்படுத் தப்படும் உபகரணங்களும் அதனுடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. (2-310)

## உருத்திரபுரம் மகா வித்திக்கு சரஸ்வதி சிலை அன்பளிப்பு

(சோலைநகர்)

கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் சரஸ்வதி சிலை ஒன்றை அமரர் முருகேசு சண்முகராசாவின் நினை வாக துணைவியார் அன்ப ளிப்பு செய்துள்ளார்.

இதனால் நீண்ட நாட்க ளாக சரஸ்வதி சிலை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேற்றப் பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி மீன லோஜினி இதய சிவதாஸ் தெரிவித் துள்ளார். (2-309)

வன்னி வலம்

# முகாமிற்கு நிரந்தரவேலி அமைக்கும் பணியில் இராணுவம்-மக்கள் விசனம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத் தின் வட்டுவாகல் பகுதியி லுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணியை விடு விக்குமாறு மக்களால் பல் வேறுபட்ட வேண்டுகோள் கள் விடுக்கப்பட்ட போதும் கோத்தபாய முகாமிற்கான நிரந்தர வேலி அமைக்கும் பணியினை இராணுவத்தி னர் மேற்கொண்டு வருகின் றனர் என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கடந்த இரண்டு தினங் களாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. மக்களின் காணிகளை இராணுவம் சுவீகரிக்கும் நடவடிக்கை முல்லைத்தீவு பகுதியில் தீவிரமடைந்து வரும் நிலையில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற போதும் இராணுவத்தின் இந்த செயற் பாட்டிற்கு மக்கள் தங்களது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். (2-281)

# 13 வயது பாடசாலை மாணவனை காணவில்லையென முறைப்பாடு



வவுனியா தரணிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த 13 வயது பாடசாலை மாண வனை காணவில்லை என தாய் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா பெரியகோம ரசன் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் வடிவேல் ரவிக்குமார் என்ற 13 வயது பாடசாலை சிறுவன் கடந்த 25 ஆம் திகதி பாடசாலை க்கு சென்று வீடு திரும்பவி ல்லை என பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் தான் பாடசாலை சென்று கல்வி கற்க மாட்டேன் எனவும் தான் வேலைக்கு செல்லப் போவதாவும் தாயாரிடம் தெரிவித்துள்ளார். மகனை பாடசாலைக்கு செல்லும் படி கூறிவிட்டு வேலைக்கு செனற தாய் மாலை வீடு வந்த வேளை மகன் வீடு திரும்பவில்லை என தாயார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்தபாடசாலைசிறுவனை கண்டால் உடனே வடிவேல் ராஜேஸ்வரி என்பவருடைய தொலை பேசிஇலக்கங்களான 077 2101553, 077 251 01 54,077 054 5615 ஆகியவற் றுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-281)

# கனியவளத் திணைக்களம் இரணைமடுக்குளத்திலிருந்து எடுக்கப்படும் மண்ணிற்கு கவனம் செலுத்துவது ஏன்?

## விவசாயிகள் கேள்வி

(மல்லாவி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் புனரமைப்பு பணி கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தற்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

குளத்தின் அணைக்கட் டினை புனரமைப்பு செய்வ தற்காக குளத்தில் இருந்து பெறப்படும் மண்ணிற்கு கனிய வள திணைக்களத்தின் அனு மதிபெறப்படவில்லை என தெரி வித்து, கனிய வள திணைககள அதிகாரிகள் சோதனை நட வடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த திணைக்கள அதி காரிகள் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் 4 வாகனங்களில் வருகை தந்து சோதனை மேற்கொண டனர். குறித்த நடவடிக்கை யின் போது, அனுமதிப்பத்திர மின்றி மண் அகழ்வில் ஈடு பட்ட 10 ரிப்பர் வாகனங்கள், உழவு இயந்திரங்கள், அதனை இயக்கிய சாரதிகள் ஆகி யோர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்த இரணைமடு விவ சாயிகள், குறித்த நடவடிக் கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கனியவள திணைக்கள அதி காரகள் வருகை தந்த வாகனங் களை மறித்து குறித்த போராட் டம் இடம்பெற்றது.

குறித்த எதிர்ப்பினை அடுதது வாகனங்களும் சாரதிகளும் விடுவிக்கப்பட்டதுடன், திணைக கள அதிகாரிகள் பாதுகாப் பாக அனுப்பி வைக்கப்பட்ட னர்.

கிளிநொச்சி மாவட்டத் தில் கனிய வள திணைக் களத்தின் அனுமதி இல்லாது சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வரு கின்றமை தொடர்பில், பல முறை அவர்களிற்கு தெரியப் படுத்திய போதிலும் நட வடிக்கை எடுக்காத திணைக் களம், தமது விவசாயத்திற் காக புனரமைக்கப்படும் குறித் திற்கு, குளத்திற்குள் இருந்து பெறப்படும் மண்ணிற்கு அனு மதி கோருவது வருத்தமளிப் பதாக தெரிவிக்கும் விவசாயி கள், கிளிநொச்சி பன்னங் கண்டி, கந்தபுரம், அக்கராயன குளம், ஆனையிறவு உள் ளிட்ட பிரதேசங்களில் விவ சாய நிலங்களில் மண்ண கழ்வு இடம்பெற்று வருகின்ற மையை கனிய வள திணைக் களம் தடுக்காமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக விவ சாயிகள் கேள்வி எழுப்பு கின்றனர்.

மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் மண் அகழவு இடம்பெறுகின்றமை தொடர் பில் மௌனம்காக்கும்திணைக களம், இரணைமடு புனர மைப்பு தொடர்பில் மட்டும் அக்கறை செலுத்துவது கவலை அளிப்பதாக விவ சாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குளத்தினை புன ரமைப்பு செய்து விவசாய நட வடிக்கைக்கு கையளிப்பதற்கு ஒத்துளைப்பு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுப் பதோடு, சட்டவிரோதமாக விவசாய நிலங்களில் மேற் கொள்ளப்படும் மணல் அகழ வினை தடுக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கின்றனர். (2-281)

# சாட்சியப் பதிவுகளை மேற்கொண்டவர்களில் 10 முறைப்பாட்டாளர்களுக்கு உடனடித் தீர்வு

## காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் விபரிப்பு

காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின்கிளிநொச்சி மாவட்டத்துக்கான அமர்வில் 283 புதிய முறைப்பாட்டாளர் கள் பதிவு செய்ததுடன், அவர் களில் 10 முறைப்பாட்டாளர் களுக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம தெரிவித்தார.

அமர்வு நேற்று முன் தினம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத் துக் கூறுகையிலேயே இவ் வாறுகூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

"ஆணைக்குழுவின் கிளி நொச்சி மாவட்டத்துக்கான சாட்சியமளிக்கும் அமர்வு, கடந்த 25 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் கரைச் சிப் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்டவர்களும், மறுநாள் செவ வாய்க்கிழமை மற்றும் 27 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய இரு நாட்களும் கண்டாவளை பிர தேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 28 ஆம் திகதி வியாழக்கிழமை பூநகரி மற் றும் பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலாளர் பிரிவு களைச் சேர்ந்தவர்களும் சாட்சியமளித்தனர்.

மொத்தமாக ஆயிரத்து 166 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டு, அவர்களில் 705 பேர் சாட்சியங்களை பதிவு செய்தனர்.

இதனைவிட, 283 பேர் சாட்சியமளிக்கப் போவதாக பதிவுகளை மேற்கொண் டனர்.

பதிவுகளை மேற்கொள் ளும் போது, அவர்களின் பிரச்சினை கேட்கப்பட்டு 10 பேருக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

மிகுதிப் பேரின் விபரங்கள பதியப்பட்டுள்ளன. சாட்சியங்களை வழங்கியவர்கள், இராணுவத் தினர் மற்றும் விடுதலைப் புலி கள ஆகிய இரு தரப்பினர் மீதும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஆணைக் குழுவின் காலம் எதிர்வரும் ஜூன் மாதத்து டன் முடிவடைகின்றது.

அதற்கு முன்பாக விசா ரணை அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி டம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின் னர், மேற்கொண்டு நடவடிக் கையை ஜனாதிபதி மேற் கொள்வார்"என்றார். (2)



வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் தமிழ், சிங்கள சித்திரை புத்தாண்டு விழா அண்மையில் வவுனியா வேப்பங்குளம் வங்கி வளாகத்தில் இடம்பெற்ற போது... (படங்கள் :- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நில அளவீட்டை இராணுவம் நிறுத்தாவிட்டால் மீண்டும் ஆயுதப் போராட்டம் வெடிக்கும்

## எச்சரிக்கிறார் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா எம்.பி

(பனிக்கன்குளம்)

**தமிழர் தாயகப்பகுதிகளில் சூட்சுமமான முறையில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற நிலஅளவீடுகள் நிறுத்தப்படாவிட்டால் மீண்டும் ஆயுதப் போராட்டம் வெடிக்கும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

முல்லைத்தீவு - சுதந்திரபுரம் பகுதியில் தனியார் காணி ஒன்றை அனுமதியின்றி அளவீடு செய்வதற்காக அதிகாரிகள் சென்ற போது பிரதேச மக்களின் எதிர்ப்பினால்அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே திருமதி. சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் அனைத்து சொத்துக்களையும் இழந்த மக்களுக்கு தற்போது இருப்பது தங்களது பௌதீக சொத்துக்களே என்று குறிப்பிட்டார், அவற்றையும் பறித்துக் கொள்ளும் முயற்சியில் இராணுவம் களமிறங்கியிருப்பது அனுமதிக்க முடியாத செயல் என்றும் அவர் கூறியுள்ளார். (2-281)




## தனியார் காணியில் இருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டன

### கிளிநொச்சியில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சிபரந்தன் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந் தமான காணியிலி ருந்தே இந்த வெடிபொருட்களை இராணுவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மீட்டுள்ளது.

இதற்கமைய எல்.எம்.ஜே ரவைகள், மகசின்தோட்டாக்கள், துப்பாக்கியின் பாகங்கள், பழைய ஷெல் ஆகியவற்றை இராணுவம் மீட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த காணியின் உரிமையாளரால் வீழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-28[illegible]



வ/பிரமண்டு வித்தியாலயத்தின் கற்றல், கற்பித்தல் உபகரணக் கண்காட்சி நேற்றுக்காலை பாடசாலையின் அதிபர் திருமதி.எம்.ஏ.மோகன் தலைமையில் நடைபெற்ற போது...

## முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஏழாம் வருட நினைவேந்தல் நிகழ்வு மே18ல்

அரசாங்கமானது, ஐந்தரை இலட்சத்துக்கும் அதிகமான மக்களை ஒன்றரை கிலோமீற்றர்கள் நீரேந்து நிலப்பரப்புக்குள் முற்றுகையிட்டு, கொத்துக்குண்டுகளாலும், பல்குழல் எறிகணைகளாலும், இரசாயன எரி அமில வாயுக்களாலும் நிகழ்த்திய மாபெரும் தமிழினப் படுகொலையை, மனிதப் பேரவலத்தை, மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, பெரும் மக்கள் கூட்டமாக ஒன்றுகூடி நீதி கேட்கும் பொறிமுறை நினைவேந்தல் எழுச்சி நிகழ்ச்சி மே 18 புதன்கிழமை அன்று முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் ஏற்பாடு செய்துள்ளோம் என வவுனியா பிரஜைகள் குழு, முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையம், தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியறியும் குடும்பங்களின் சங்கங்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் மேற்படி மூன்று அமைப்புக்களும் முள்ளிவாய்க்கால் நினைவு தின அனுஷ்டிப்பு தொடர்பில் இணைந்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றுகூடி, தமிழர் தேசியப்பெருந்துயரை உலகுக்கு பறைசாற்றுவதோடு, வீழ்ந்த இடத்தில் வீரத்தின் ஆரம்பமாக எழுச்சி கொள்ளும் தமிழ்த்தேசிய இனத்தின் ஒன்றுகூடலாகவே, இம்முறை 'முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஏழாம் வருட நினைவேந்தல்' நிகழ்ச்சியை பிரகடனம் செய்துள்ளோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் ஜூன் மாதம் தொடங்கவுள்ள காலச்சூழலில், இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு உட்பட்டும் தப்பியும் பிழைத்திருக்கும் தமிழ்த் தேசிய இனம், கந்தகத்தாலும் குருதியாலும் தோய்த்து எடுக்கப்பட்டு இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட மண்ணில் நின்றுகொண்டு நீதி கேட்கும் குறித்த மே 18 தேசிய ஒன்றுகூடலானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

மே18 புதன்கிழமை அன்று தமிழர் தேசியப்பெருந்துயரை உலகுக்கு பறைசாற்றுவதற்காக, தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் முழுமையான ஹர்த்தாலுக்கு (முழுநாள் கடையடைப்புக்கு) அனைத்து வர்த்தக சங்கங்களையும் தனியார் பேருந்து போக்குவரத்து சங்கங்களையும், வன்முறைகள் - படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயிர்நீத்த எமது உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலிப்பதை தமிழ் இனத்தின் (ஒவ்வொரு பிரஜையினதும்) தேசியக்கடமையாகக்கொண்டு முழுமையான ஒத்துழைப்பை உளத் தூய்மையோடு வழங்கு மாறும் கேட்டுக்கொள்கின்றோம். (2-4-281)

## அத்துமீறி குடியமர்ந்துள்ள தனிநபரை வெளியேற்றி காணியை ஒப்படைக்குக

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுககுட்பட்ட உடையார்கட்டு வடக்கு கிராமத்திலுள்ள நிறோஜன் விளையாட்டுக்கழக காணியில் அத்துமீறி குடியமர்ந்துள்ள தனிநபரை வெளியேற்றி அந்த காணியை தம்மிடம் ஒப்படைக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் அங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத், தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய அதிகாரி, பிரதேச செயலாளர், சம்பந்தப்பட்ட விளையாட்டுக்கழகத்தினர் கலந்துரையாடி தங்களுக்கு இதற்கான சாதகமான பதிலை தருவதாக கூறியதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது இதன் போது மக்கள் பிரதிநிதிகள் அரச அதிகாரிகளிடம் மகஜர்களை கையளித்தனர்.

இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர் பிரிவின் கீழ் சுதந்திரபுரம் சந்தியில் உள்ள பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட 12 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணியை 2004 ஆம் ஆண்டிலிருந்து நிரோஜன் விளையாட்டுக் கழகத்தினராகிய நாம் பயன்படுத்தி வந்தோம். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் மீள்குடியேற்றம் வந்த போது இந்தக் காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தி மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களை நிறுத்தி வைத்திருந்தார்கள். இதனால் நாம் மைதானத்தை பயன்படுத்த முடியவில்லை

கடந்த 2015 ஆம் ஆண்டு இந்தக் காணி இராணுவத்தால் முற்றாக விடுவிக்கப்பட்டது. இதன் பின்னர் இந்த காணியை குருசாமி ஆனந்த குமார் என்பவர் அடாத்தாக பிடித்து ஆட்சி செய்கிறார். இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம்பல தடவை எடுத்துக் கூறியும் தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை. இக் காணி பொதுத் தேவைக்கு ஒதுக்கப்பட்டது என முன்னர் பதவியிலிருந்த பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தினார். அதை விட கடந்த 13.06.2015 அன்று காணி ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையிலும் உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே எமது பிரதேச அபிவிருத்தியையும் இளைஞர்களின் தேவைகளையும் அவர்களின் உடல், உள வளர்ச்சிக்காக அவர்கள் விளையாடி வந்த இந்த மைதானத்தை உடனடியாக மீட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-281)

# தற்கொலை அங்கி மீட்பு விவகாரத்திலேயே ராம், நகுலன் உள்ளிட்ட தளபதிகள் கைது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சாவகச்சேரி பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி ஆயுதங்கள் தொடர்பான விவகாரம் குறித்த விசாரணைகளுக்காகவே ராம் உள்ளிட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் திடீரென தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வரும் நிலையில், அதற்கான காரணம் தெளிவற்ற நிலையிலுள்ளது.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பு விவகாரத்துடன் தொடர்புடைய காரணங்களுககாகவா முன்னாள் புலித்தலைமைகள் மீளவும் கைது செய்யப்படுகிறார்கள் என பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியை வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மையில் அவர்களின் கைது எனது விடயப் பரப்புக்கு அப்பாற்பட்டது. அவர்களை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரே கைது செய்துள்ளனர். எனக்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய முன்னாள் புலித் தலைவர்களின் கைது சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கிஉள்ளிட்ட வெடிபொருட்கள் தொடர்பில் முன்னெடுக்கபட்டு வரும் விசாரணைக்கு அமைவானதாகும்.

அது குறித்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடமே மேலதிக தகவல்களைக் கேட்க வேண்டும் என்று பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அப்படியாயின், கைது செய்யப்பட்டுள்ள புலித் தலைவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா? புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் கைது செய்யப்படுவதற்கு அதுவும் காரணமா? என பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியை வினவியபோது. இதற்கு பதிலளித்த பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, "அது குறித்து இப்போதைக்கு என்னால் கருத்துக் கூற முடியாது என்றார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அது குறித்து விசாரணை செய்கிறது. அவர்களின் விசாரணையின் பின்னர் எமக்கு அளிக்கப்படும் அறிக்கையின் பிரகாரமே அது குறித்த முடிவுக்கு எம்மால் வரமுடியும். அப்போதே புலிகள் மீள தலைதூக்க முயற்சிக்கின்றனரா என்பதை சரியாக கூற முடியும் அதனால்இப்போதைக்கு அந்த கேள்விக்கு விடையளிப்பது கடினம்" என்றும் பாதுகாப்பு செயலர் தெரிவித்தார்.

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து கடந்த மார்ச் மாதம் கைப்பற்றப்பட்ட தற்கொலை அங்கி உட்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் பிரதான சந்தேக நபரான எட்வர்ட் ஜூலியஸ் எனப்படும் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின்ரால் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அது குறித்து முன்னெடுக்கப்பட்டுள்ள ஆழமான விசாரணைகளில் இதுவரை மொத்தமாக 12 பேர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காக கைது செயயப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களின்தொலைபேசிவலையமைப்பை வைத்து நடத்திய விசாரணைகளில் அவர்கள் ஒரு வலையமைப்பாக செயற்பட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையிலேயே ஆழமான விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அதன்படியே விடுதலைப் புலிகள் அமைப்பில், முன்னர் கிழக்கு மாகாணத் தளபதிகளில் ஒருவராக இருந்த ராம் எனப்படும் எதிர்மன்னசிங்கம் அரிச்சந்திரன், சார்ள்ஸ அன்ரனி படைப் பிரிவின் கட்டளைத் தளபதி கணபதிபிள்ளை சிவமூர்த்தி எனப்படும் நகுலன் மற்றும் திருமலைக்கு பொறுப்பாக இருந்த புலனாய்வுத் தளபதியான கலையரசன் எனப்படும் அறிவழகன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார். (இ-5)

## வடமாகாண ஆளுநருடன் தூதுக்குழுவினர் சந்திப்பு



வரலாற்றுப் புகழ்மிக்க சக்திப் பீடங்களிலொன்றான நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயச் சூழலில் 62 அடி உயரமான புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு அரசால் முயற்சி எடுககப்படுவதாகவும் இதற்கு வடமாகாண ஆளுநர் முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் தொடர்பில் இந்து மாமன்றம் கடந்த 2016 ஏப்ரல் முதலாம் திகதி தனது கண்டனத்தை பத்திரிகைகள வாயிலாகவும் ஆளுநருக்கும் தெரிவித்ததுடன், அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்துக்களின் புனிததலங்களுக்கு அருகாமையில் இவ்வாறான சிலைகளை அமைப்பதை இந்துகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்களெனவும் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து கடந்த 27 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் பத்தர முல்லையிலுள்ள ஆளுநரின அலுவலகத்தில் இந்து மாமன் றத் தூதுக்குழுவினருடன் ஆளுநர் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தார்.

இத்தூதுக்குழுவில் இந்து மாமன்றத்தலைவர் கந்தையா நீலகண்டன், பொதுச் செயலாளர சி.தில்லை நடராஜா, பொருளாளர் வே.கந்தசாமி, உபதலைவரும் சமூக நலன் குழுத்தலைவருமான சி. தனபாலா மற்றும் ஆலோசகர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் முகாமைப் பேரவை உறுப்பினர் ந. மன்மதராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

தூதுக்குழுவினால் நயினாதீவுக் கடலில் நிர்மாணிக்கப்படவுள்ள புத்தர் சிலை இந்துமக்களை மத ரீதியாக பாதிக்குமெனவும் இதனால் இனநல்லுறவு கேள்விக்குரியதாக இருக்குமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ)

## 5 லட்சம் நிதியொதுக்கீட்டில் வாழ்வாதார உதவித்திட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்திஅமைச்சர்பா.டெனிஸ வரனின் திட்டத்திற்கு அமைவாக, கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் (PSDG) யாழ். மாவட்ட வேலணை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வேலணை கிழக்கு மாதர்கிராம அபிவிருததி சங்கத்துக்கு மோர் மிளகாய் பதனிடும் உபகரணங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. அதனை உத்தியோக பூர்வமாக அச்சங்கத்திற்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழன் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

இத் திட்டத்தின் மூலமாக சுமார் 10 குடும்பங்களது வாழ்வாதாரம் கிடைக்கும் எனவும் மேலும் இது அபிவிருத்தி செய்யப்படும் போது இன்னும் பல குடும்பங்களது வாழ்வாதாரமும் உயர்த்தப்படும் என்று அங்கு உரையாற்றிய பிரதேச செயலாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-281)

# செய்தித்துளிகள்

## கூட்டு எதிர்க்கட்சி என்ற பதமே சட்டவிரோதமானது-அரசாங்கம்

கூட்டு எதிர்க்கட்சி என்ற பதம் சட்ட விரோதமானது என்றும் அந்த பதத்தை உபயோகிக்கும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் சட்டத்தின் முன் குற்றவாளிகளாக நேரலாம் என்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி என்ற பதத்திற்கு முக்கியமளித்து அதன் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக செயற்படும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள மேற்படி அமைச்சு இத்தகைய செயற்பாடுகள் சமூக பாதிப்புக்கான முன்மாதிரியாக அமைவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி நிமல் போபகே அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அறிக்கையொன்றை அனுப்பியுள்ளார். (இ-5)

## ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் விளக்கமறியலில்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். முகநூல் ஊடாக இவ்வாறு ஜனாதிபதிக்கு இவர் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். மலேசியாவிலிருந்து குறித்த நபர் நாடு திரும்பிய போது நேற்று முன்தினம் புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார். முகநூல் ஊடாக இந்த நபர ஜனாதிபதியை கொலை செய்ய போவதாக எச்சரித்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டதனை எதிர்த்தே இவர் ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்திருந்தார். இவரை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது மே மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி முஹம்மது மிஹால் உத்தரவிட்டார். (இ-5)

## பாண் விற்ற மூவருக்கு தண்டம்

110 கிராம் குறைந்து தயாரிக்கப்பட்ட பாண்களை விற்பனை செய்தோம் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட மூன்று பேக்கரிகளின் உரிமையாளர்களுக்கு தலா 2,000 ரூபாய் வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்தே நுகேகொடை மேலதிக நீதவானும் மற்றும் மேலதிக மாவட்ட நீதவானுமாகிய அனுஷ்க செனவிரத்ன உத்தரவிட்டார். அளவீடு மற்றும் தரநிரணய திணைக்கள அதிகாரிகளே, பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். (இ-5)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் எ.வி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரன் சிறப்புரையையும் செயலாளர் மு.சண்முகம் நன்றியுரையையும் வழங்கவுள்ளனர். (இ

++++++++

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி இந்து மன்றத்தினர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழாவை நாளை மறுதினம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இவ் விழாவில் கல்லூரி மாணவர்களின் ஆன்மீக நிகழ்வுகளும் சிறப்பு நிர்வாக சைவத்தமிழ் உலகம் கண்ட சொல்வேந்தர் எனும் விடயத்தில் தெய்வீக ஞானத் தமிழருவி மதுரகவி. காரைஎம்.பி. அருளானந்தம் ஆசிரியரின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (இ

## நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல் பணிகள்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலுமுள்ள நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல் பணிகள் கீழ்வரும் தினங்க ளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியிலுள்ள நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலகத்தில் 02.05.2016 திங்கட் கிழமை, 03.05.2016 செவ்வாய்க்கிழமை, 05.05.2016 வியாழக்கிழமை, 06.05.2016 வெள்ளிக்கிழமை நடை பெறும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ-81)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—70

# அசேதன இரசாயனப்பாவனைக்கு முற்றுப்புள்ளியும் மாற்றீடும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 87

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எப்படியிருக்கின்றீர்கள்? நொந திருக்கும் போதுதான் உங்கள் சுகத்தையும் ஆவலுடன் விசாரிக்க எழுதும் இக்கைகளுக்கும் ஞானம் பிறந்திருக்கின்றது. வலி சுமந்தவர்களுக்குதான் வலியின் சுமையும் அதன் ஆற்றுகையும் உணரத்தலைப்படும். வைரவரின் வாகனம் குறுக்காலை பாய்ந்ததால் வந்தவலியிது. பாய்ந்தவாகனம் அந்த இடத்திலேயே உயிர் நீத்துஎழுதும் இக்கைகளையும் கால்களையும் பலமாகதேய்த்த பின் கட்டுப்பட்டு கட்டும்போட வைத்திருக்கின்றது. இருப்பினும் உங்களுடனான இந்த தொடர்பாடலை இடைநிறுத்த விரும்பாததால் அந்தவலியுடன் எழுதத்துடித்த இக்கைகளுக்கு நன்றி.

பலவகைநோய்கள், இனந் தெரியாத இளகிய மனமற்ற நோய்கள், வயதுவேறுபாடின்றி பல அங்கங்களை கபளீகரம் செய்து விடுகின்ற ஆபத்தான சூழ்நிலை. உலகம் ஆக்கத்தை நோக்கி செல்வதாக நினைத்து அழிவினை சூழ்ந்து கொள்ள வைத்திருக்கின்றது. பசுமைப் புரட்சியின் செயலூக்கத்தின் முக்கியமான இடு பொருளான உள்ளீடுகளில் குறிப்பாக அசேதன இரசாயன பாவனை எதிர் பார்த்த அளவைவிட தாண்டி விட்டநிலையில் அதன் தாக்கமாக குறிப்பாக நாம் வாழுகின்ற சூழலை மாசடையவைத்து விட்டது. இனி யென்ன? இனிவரும் சந்ததிக்கு வாழவழியில்லாமல் செய்து விட்டு இதைவிட என்ன கொடுக்கப் போகின்றோம்?. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதனை நாம் மறந்து விட்டோமே. இயற்கையின் குழந்தைகளாக வளரவே ஒவ்வொரு உயிரும் விருப்பப்படுகின்றது. அதுதான் நியதி. சுகபோகமாக வாழப்பழகியபின் உடற்சுகத்தை விரைந்து இழக்க வேண்டிய நிலையிலேயே மனித குலம் இருக்கின்றது. இறுதியில் எல்லாம் முடிந்தபின் யாரை நொந்துஎன்ன பயன்.

வரும் போது கொண்டு வராததை இடையில் ஆடியோடி பெற்று விட்டு அதனை அனுபவிக்ககூட கொடுத்து வைக்காது இடைவழியில் செல்வதில் என்ன இருக்கின்றது? அதற்காக எதுவுமே செய்யாது நூறு வருடங்கள் வாழ்ந்தும் எந்தப்பயனுமில்லை. நாம் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தமுண்டு. ஒவ்வொருவர் வாழ்க்கையும் பெறுமதியானது அதற்கொரு வரலாறும் உண்டு.

அசேதன இரசாயனங்களின் தேவை புதியதிருந்திய கலப்பினப் பாக்கம் செய்யப்பட்டபயிர் இனங்களுக்குஅவசியம் என்பதனை எக்காலத்திலும் தவிர்க்க முடியாது. உணவினை அதிகளவில் உற்பத்தி செய்வதற்கான நோக்கமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பின்விளைவுகளைத் தவிர்த்து உற்பத்தி என்பதனைமட்டும் நோக்கியது தவறு என காலந்தாழ்த்தியே விஞ்ஞானமும் உணர்ந்திருக்கின்றது. பாரம்பரிய பயிரினங்களில் இந்தவிதமான உள்ளீடு அவசியம் இல்லைஎன்பதும் கிடைக்கின்ற கூட்டுரம் மற்றும் சேதனப் பசளைகளின் மூலம் பயிருற்பத்தி செய்யமுடியும் என்றும் எம் மூதாதையர் செய்ததும் சொல்லிச்சென்றதும் அவசியம் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். மாறாக திருந்திய கலப்பினப் பயிர்களை பயிர்செய்வதாயின் அதற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை அசேதன இரசாயன வடிவில் கொடுக்காது இயற்கையை அனுசரித்த மாற்றீடான வழியில் உயிர்ப்பசளைகளையும் நன்மைதரும் நுண்ணங்கிகளையும் பயன்படுத்திவெற்றி காணலாம். பல்லாண்டுகளாக நடைபெற்ற ஆய்வுகள் புலப்படுத்தும் இந்த சூழலுக்கிணைவான எளியதொழில் நுட்பங்கள் எமக்கு அவசியம் தேவையானதும் இனியும் எமது சூழலை மாசுபடுத்தாது வைப்பதற்குமான முயற்சியாகும்.

எங்களூரில் உள்ளவளத்தை நாம்சரியாக இனங்காண வில்லை. அதனைநாம்முழுமையாக இனங் கண்டுபயன்படுத்தினால் எமது பயிர்ச்செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிடலாம். அண்டை நாடுகளில் இவ்வகைத் தொழில் நுட்பங்கள் பரந்துபட்ட அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

உயிர்ப்பசளைகள் மண்ணுக்கு மேலும் உரமூட்டுவதுடன் மண்ணில் நன்மைதரும் உயிரினங்களினதும் நுண்ணுயிரிகளினதும் எண்ணிக்கையை அதிகரிக்கும் வல்லமையுள்ளன. மேலும் இவற்றினால் சூழலுக்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது. அசேதன இரசாயன பசளைகள் மற்றும் பீடைநாசினிகளை பயன்படுத்துவதனால் சூழலுக்குஏற்படும் பாதிப்பு உயிர்ப்பசளைகள் மற்றும் நன்மை தருகின்ற நுண்ணங்கிகளினால் ஏற்படாது. மேலும் அசேதன இரசாயன பசளைகளில் பயிர் அகத்துறிஞ்சியது போக மீதமானவை மண்ணில் செறிவாகி நீர்நிலைகளை அடைந்து விடுகின்றன. இன்னும் பீடைநாசினிகள் மரக்கறிப்பயிர்கள் மற்றும் பழங்களில் செறிவாகி அவற்றினை நாம் உணவாக்கும் போது எமது உடலுக்குள் சென்று தீங்கினைத் தருகின்றன. இவ்விரசாயனங்களுக்கு மாற்றீடாகதான் உயிர்ப்பசளைகளும் நன்மைதரும் நுண்ணங்கிகளின் பிரயோகமும்.

எங்கள் பிரதேசத்தில் வளரக் கூடிய இவ்வாறான உயிர்ப்பசளைகள் மற்றும் எமது மண்ணில இருக்கின்ற நன்மை தருகின்ற மண் வாழ் நுண்ணங்கிகளைப் பயன்படுத்துவதனால் எந்தவித பிரச்சினையும் எழவாய்ப்பில்லை. மாறாக எமது மண்ணை நன்மை தரும் நுண்ணங்கிகள் நிறைந்த சிறந்த பயிர்செய்நிலமாக மாற்றுவதற்கான வாய்ப்பினை நாம் பெறுகின்றோம். அத்துடன் நச்சுத் தன்மையான அசேதன இரசாயனபசளைகளையும் பீடைநாசினிகளையும் பயன்படுத்துவதனை தவிர்த்து சேதன முறை மூலமான உயிர்வாழ் பசளைகள் மற்றும் நுண்ணங்கிகளைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும். மண்ணில் வாழும் நன்மை தருகின்ற உயிரினங்களினை நாம் முழுமையாகப் பயன்படுத்துதல் சிறந்தது. சுகாதாரகட்டுப்பாட்டுகளை முறையாகபேணி இவ்வாறான பசளைகளையும் நுண்ணங்கிகளையும் நாம் விருத்தி செய்து ஏனையவர்களும் பயன்படுத்த ஊக்கமளிக்க வேண்டும். அநேகமானவை சேதன கழிவுகளை மீள் சுழற்சி செய்வதன் மூலம் நன்மை தரும் நுண்ணங்கிகளை விருத்தி செய்யக் கூடியனவாக இருப்பதனால் இதுவும் நன்மைதரும் விடயமாகும்.

எமது சூழல் மாசுபடுவதை மேலும் தடுப்பதற்கான செயன் முறைகளில் இந்தவகையான முயற்சிகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். அதுவும் மேலைத்தேய சர்வதேச நிறுவனங்களின் இவ்வாறான பொருட்களை இங்கு சந்தைப் படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவும் எங்களூர் மக்களின் உற்பத்தியாக எம்மவர்க்கு வேலை வாய்ப்பினை வழங்கும் சந்தர்ப்பமாக நடைமுறைப் படுத்தும் மற்றும் சூழலைப் பாதுகாக்கும் எந்ததிட்டத்திற்கும் நாம் முன்னுரிமை கொடுத்து ஊக்கமும் கொடுக்க வேண்டும். சூழலுக்கிணைவான பசளைப் பிரயோகமும் பீடைக்கட்டுப்பாடும் எமது பிரதேச த்து பயிர்ச்செய்கையை சேதன முறை மூலமானதாக ஆக்குவதற்கு பெரிதும் உதவும். எமது பிரதேசத்தை நாம் காப்பாறினாலன்றி வேறெவர் செய்வார். அதனை நாம் எதிர்பார்க்கவும் முடியாது. தன் கையே தனக்குதவி. ஒற்றுமையே எமதுபலம். அதனை நாம் சிதற விடவும் கூடாது.



# சிரியாவில் குழந்தைகளுக்கான வைத்தியசாலை மீது தாக்குதல்


## குழந்தைகள், வைத்தியர்கள் உட்பட 50 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

**சிரியாவில் அலெப்போ நகரிலுள்ள குழந்தைகள் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் வைத்தியர்கள், குழந்தைகள் உட்பட 50 பேர் பரிதாபமாக பலியாகினர்.**







சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் அரசுப் படைக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து வந்த உள்நாட்டு போர் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் முயற்சியால் முடிவுக்கு வந்தது. அங்கு தற்போது போர் நிறுத்தம் அமுலில் இருந்து வந்தாலும், அதையும்மீறி சில தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

குறிப்பாக, அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அலெப்போ நகரை மீட்கும் முயற்சியில் அரசுப்படைகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. இதற்காக அரசுப்படைகள் நடத்தும் தாக்குதல்களில் அப்பாவி மக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்த நிலையில், அங்குள்ள ஒரு வைத்தியசாலை மீது நேற்று முன்தினம் அரசுப்படைகள் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தின. இந்த குண்டுவீச்சில் வைத்தியர்கள், வைத்தியசாலை காவலர்கள், குழந்தைகள் மற்றும் அவர்களுக்கு துணையாக இருந்த தாய்மார்கள் உட்பட 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அந்த நகரின் பிரபல குழந்தைகள்நல மருத்துவ நிபுணரும், இந்த தாக்குதல்களில் சிக்கி பலியாகி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 6 நாட்களாக அலெப்போ நகரில் நடந்துவரும் மோதல்களில், ஜனாதிபதி ஆதரவு படை நடத்திய தாக்குதல்களில் 84 அப்பாவி பொதுமக்களும், கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதல்களில் 49 பேரும் பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரியவிரும்பாத ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரிகள்



தாய்லாந்தில் இடுப்புப் பகுதியில் இணைந்து தம்மிடைய இரு கால்களை பங்கீடு செய்த நிலையில் ஒட்டிப் பிறந்த அபூர்வ 7 வயது இரட்டைச் சகோதரிகள், தாமாக கைகளையும் கால்களையும் பயன்படுத்தி நடமாடவும் ஆடை அணியவும் மாடிப் படிகளில் வேகமாக ஏறி இறங்கவும் ஆட்டோவை செலுத்தவும் கற்றுக் கொண்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகின்றனர்.

பாங்கொக்கின் வடக்கே சுமார் 250 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகொன் ஸவான் என்ற பிராந்தியத்தில் வாழும் பின் மற்றும் பான் ஆகிய இந்த சிறுமிகள் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அந்த சிறுமிகளை பிரிக்க முடியும் என வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில், அவர்களோ தொடர்ந்து பிரியாது ஒன்றிணைந்து இருக்கவே விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அகதிகளுக்காக கண்கலங்க முடியாது அவுஸ்திரேலிய பிரதமர் சர்ச்சைப்பேச்சு



படகில் வரும் அகதிகளுக்காக அவுஸ்திரேலியாவிலுள்ளவர்கள் கண்கலங்க முடியாது என அவுஸ்திரேலியாவின் பிரதமர் மல்கொம் டேர்ண்புல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு வெளியேயுள்ள செயற்பாட்டு முகாமை மூடவும் என பப்புவா நியூ கினி உத்தரவிட்டமையை அடுத்து, டேர்ண்புல்லின் குடியேற்றக்கொள்கை சிக்கலுக்குள்ளாகிய மறுதினமே மேற்படி கருத்து வெளியாகியுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் தேர்தலை எதிர்கொள்ள எதிர்பார்த்துள்ள மல்கொம் டேர்ண்புல், படகின் மூலமாக வந்தடைந்த உண்மையான அகதிகளை அவுஸ்திரேலியாவில் குடியேற்றுவதாலும், மேலும் பலர் ஆபத்தான பயணத்தைத் தொடர ஊக்குவிப்பதாக அமையும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆட்கடத்தலை தடுப்பதன் மூலம் மக்கள் கடலில் மூழ்குவதை தாங்கள் தடுத்ததாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்த டேர்ண்புல், இதற்காக தாங்கள் கண்கலங்க முடியாது எனவும் தங்களது தேசிய நோக்கத்தில் தாங்கள் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பதாக மேலும் தெரிவித்தார்.

படகில் வரும் அகதிகளை, பப்புவா நியூ கினியின் மனுஸ் தீவிலுள்ளதும் நவுறுவிலுமுள்ள செயற்பாட்டு நிலையங்களுக்கு அனுப்பும் நீண்டகாலக் கொள்கையைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா, அகதிகள் எனக் கருதுவோரை, பப்புவா நியூகினியிலும் கம்போடியாவிலும் குடியேற்றுகின்ற போதும் அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிப்பதில்லை எனத் தெரிவித்தார். (இ-5)

### தமிழகத்திலுள்ள இலங்கையர்களுக்கான

# இரட்டைப்பிரஜாவுரிமை நடவடிக்கை ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரமே

## ஜனாதிபதி விளக்கமளிப்பு

**தமிழகத்திலுள்ள இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அறிவித்தமையானது தேர்தல் பிரசார நடவடிக்கை என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை சந்தித்துக் கலந்துரையாடிய சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் எதிர்வரும் 16ம் திகதி நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் வாக்குகளைப் பெறும் நோக்கிலேயே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தொண்டையில் நோய் தொற்று இருப்பதால் பேச முடியவில்லை

## விஜயகாந்த் விளக்கம்

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் உரையாற்றும்போது,

அதிமுக, திமுகவை புரட்டிப் போடும் மாஸ்டர்தான் இந்த விஜயகாந்த். இந்த தேர்தலில் திமுக 2 ஆவது இடம் கூட பெறாது என ஜெயலலிதாவும், அதிமுகவுக்கு 3-வது இடம் கூட கிடைக்காது என கருணாநிதியும் மாறி மாறி பேசியுள்ளனர். இதிலிருந்தே முதலிடம் எங்களுக்கு உறுதி செய்யப்பட்டு விட்டது தெரிகிறது. மக்கள் நலக் கூட்டணி வெற்றிபெற்று மே 20 அல்லது 21 ஆம் திகதி நான் முதல்வராக பதவியேற்பேன்.

திமுகவும், அதிமுகவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். தமிழகத்துக்கு இவ்விரு கட்சிகளும் ஏதும் செய்யவில்லை. இப்போது வெளியாவதெல்லாம் கருத்துக் கணிப்பு அல்ல கருத்து திணிப்பு. பத்திரிகைகளுக்கு ஜெயலலிதா சூட்கேஸ் கொடுத்துவிட்டார்.

எனக்கு பேசத் தெரியாது என அனைத்து பத்திரிகைகளும் எழுதுகின்றன. நான் ஆங்கிலத்தில் பேசினாலதான் உங்களுக்கு புரியுமா? எனக்கு தொண்டையில் நோய் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பதை ஏற்கனவே எனது மனைவி சொல்லிவிட்டார். அதனாலேயே தேர்தல் பிரசார கூட்டங்களில் மெதுவாக பேசுங்கள் என மருத்துவரும் அறிவுரை கூறியுள்ளார்.

மாடி மேல் மாடி வைத்தது போல் ஜெயலலிதா அமைக்கும் பிரசார மேடை பற்றி எழுத முடியுமா? அப்படி எழுதினால் அரிவாளால் வெட்டிவிடுவாரா?. ஜெயலலிதாவும், கருணாநிதியும்தான் தமிழகத்தை ஆட்சி செய்ய வேண்டுமா? குப்பனும், சுப்பனும் ஆட்சி செய்யக் கூடாதா? பணம், ஜாதி உள்ளிட்ட எதனாலும் என்னை விலைக்கு வாங்க முடியாது. இவ்வாறு விஜயகாந்த் பேசினார்.(இ-5)

# அன்புமணி முதல்வரானால் நான் மகிழ்ச்சி அடைவேன்

## சீமான் பேட்டி

கன்னியாகுமரியில் தனது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய வந்திருந்தார், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். அவரிடம் நடத்தப்பட்ட நேர்காணலில்,

**இந்தத் தேர்தலில், உங்கள் கட்சிக்கான வெற்றிவாய்ப்பு எப்படி இருக்கிறது?**

மாற்றத்துக்கான களமாகத்தான் இந்தத் தேர்தலை, நாம் தமிழர் கட்சி பார்க்கிறது. நீண்ட காலமாகத் தமிழர் நிலத்தை தமிழர் ஆளவில்லை. தமிழர்களுக்கு அரசியல் வலிமை இல்லை. சாதி, மத மோதல்களால் தமிழர்களைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அதனால், தமிழர்கள் அடிமையாக வாழ வேண்டிய சூழல் இருந்தது. தமிழன் தன்னை மீட்டுருவாக்கம் செய்வதற்கான வாய்ப்பு இப்போது உருவாகி இருக்கிறது.

**தமிழனைத் தமிழன்தான் ஆள வேண்டும் என்கிற கோஷத்தை முன்வைக்கக் காரணம் என்ன?**

தலைவனாக யார் வேண்டுமானாலும் இருக்கலாம். சேவை செய்யலாம். அதைத் தான் விஜயகாந்த், வைகோ போன்றவர்களிடம் சொலகிறேன். தலைவனாக இருந்து சேவை செய்யுங்கள். ஆனால், தமிழனை ஆள நினைக்காதீர்கள்.

பெரியார் என்ன சொன்னார். ஆளுற உரிமை பச்சைத் தமிழன் காமராஜருக்குதான் உண்டு. எனக்குச் சேவை செய்கிற உரிமைதான் உண்டு என்று சொன்னார்.

என்னை மற்றவர்கள் ஆண்டால், நான் அடிமை. என்னை நான்தான் ஆளவேண்டும். தமிழ்



மண்ணை தமிழன்தான் ஆள வேண்டும்.

தமிழன் ஆட்சி செய்திருந்தால் அணு உலை வந்துருக்குமா? ஆற்று மணலை அள்ள முடியுமா? மலையைக் குடைய முடியுமா? நிலத்தடி நீரை உறிஞ்ச முடியுமா? காட்டை அழித்து மரங்களை வெட்ட முடியுமா? முடியாது.

பெரியார் சொன்னதைப் போல், தமிழனைத் தமிழன்தான் ஆள வேண்டும். இது கோஷம் அல்ல... எங்கள் உரிமை.

**அப்படியென்றால், திருமாவளவன் தமிழர்தானே? அவரைப் போன்ற தமிழர்கள் பலரும் உங்களோடு அணி சேராததற்கு என்ன காரணம்?**

என்னை சின்னப் பையன் எனறு நினைத்திருக்கலாம். இவன் என்னடா கட்சினு சொல்லுறான், ஆட்சினு சொல்லுறான் என நினைத திருக்கலாம். சமூக நீதி பேசுபவர்கள் எத்தனை ஆதித் தமிழருக்கு சீட் கொடுத்திருக்காங்க? நான் 17 சீட் கொடுத்திருக்கேன்.

குயவர், பொற்கொல்லர், சலவைத் தொழிலாளி என எல்லாச் சமூகங்களுக்கும், ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கும் சீட் கொடுத்திருக்கேன். மற்றவர்களால் அதைச் செய்ய முடியலையே. நிச்சயமாக அவங்க எங்களோட இணைய வருவாங்க.

**அன்புமணி, முதல்வர் கனவுடன் இருக்கிறாரே?**

விடுதலைச் சிறுத்தைகளையும், பாட்டாளி மக்கள் கட்சியையும் எங்கள் உறவுகளாகத்தான் பார்க்கிறோம். எங்கள் மண்ணை ஆள வேண்டும் என்று விஜயகாந்தே நினைக்கும் போது, அன்புமணி ஆசைப்படுவதில் தப்பே இல்ல. அன்புமணி முதல்வரானால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்றார்.(இ-5)

### பாரதச் செய்தி

# தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஜல்லிக்கட்டு நடத்தப்படும்

## கனிமொழி பிரசாரம்

தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்தால, ஜல்லிக்கட்டு நடத்தப்படும் என தி.மு.க. மாநில மகளிரணி அமைப்பாளர் கனிமொழி தெரிவித்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து கனிமொழி பிரசாரம் மேற்கொண்டார். இதன் போது, பர்கூர் மறறும் குந்தாரப்பள்ளியில் கருத்து தெரிவித்த அவர், 'திமுக ஆட்சியில் எந்த வித பிரச்சினையும் இல்லாது நடைபெற்ற ஜல்லிக்கட்டு, அதிமுக ஆட்சியின் பின்னர் பல பிரச்சினைகளை சந்தித்து, ஜல்லிகட்டு நடைபெறாது நிறுத்தி வைக கப்பட்டுள்ளது. ஆனால் எதிர் வருகின்ற சட்ட மன்ற தேர்தலில், தி.மு.க. மீணடும் ஆட்சிக்கு வந்தால் ஜல்லிக்கட்டு நடத்தப்பட வழிவகை செய்யப்படும். அதுமட்டுமன்றி கிருஷ்ணகிரியில் மருத்துவக்கல்லூரி ஆரம்பிக்கப்படும். அத்தோடு, அரசு சார்பில் மாம்பழக்கூழ் தொழிற்சாலையும் கொண்டு வரப்படும் கடந்த 5 ஆண்டுகளாக தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா, கொட நாடடில் ஓய்வு எடுத்தே நாட்களை கடத்தி விட்டார். ஓய்வு எடுப்பதற்காகவே ஜெயலலிதா முதல்வரானவர். எனவே தான், அவரை நிரந்தரமாக ஓய்வு எடுக்க அனுப்பிவைக்க தமிழக மக்கள் முடிவு செய்துவிட்டனர்.' என்று தெரிவித்துள்ளார். (இ-5)

# கோடீஸ்வர வேட்பாளர்களில் வசந்தகுமாருக்கு முதலிடம்

இதுவரை வேட்பு மனு தாக்கல் செய்துள்ள கோடீஸ்வர வேட்பாளர்களில் தொழிலதிபர் வசந்த குமார் முதல் இடத்தில் உள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் களத்தில் உள்ள வேட்பாளர்களில் சுமார் 25 சதவீதம் பேர் கோடீஸ்வரர்கள் ஆவார்கள்.

வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகுதான் தேர்தலில் போட்டியிடும் கோடீஸ்வரர்கள் எத்தனை பேர் என்பது தெரிய வரும்.

இதுவரை வேட்பு மனு தாக்கல் செய்துள்ள கோடீஸ்வர வேட்பாளர்களில் தொழிலதிபர் வசந்த குமார் முதல் இடத்தில் உள்ளார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர் நெல்லை மாவட்டம் நாங்குநேரி தொகுதியில் போட்டியிடுகிறார்.

நாங்குநேரி தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ள அவர் தனது சொத்துக்கள் மற்றும் தம் குடும்பத்தினர் சொத்துக்கள் பற்றிய தகவல்களை உரிய ஆவணங்களுடன் கொடுத்துள்ளார். அதில் அவர் பல்வேறு நிதி நிறுவனங்களிடம் இருந்து ரூ.122.53 கோடி கடன் வாங்கி



இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தன் மனுவில், தனக்கு ரூ.332.27 கோடிக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதாக எழுதியுள்ளார். தமிழ்நாடு முழுவதும் உள்ள வசந்த் அன்கோ கடைகளின் வருவாய் அடிப்படையில் அவர் சொத்து மதிப்பை பட்டியலிட்டுள்ளார்.

இலத்திரனியல் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனையில் வசந்தகுமாரின் வசந்த் அன்கோ நிறுவனம் தொடர்ந்து சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மெழுகுவர்த்தியால் ஏற்பட்ட தீ; 6 சிறுமிகள் தீயில் கருகி பலி

உத்தரப்பிரதேசத்தில் இரவில் அணைக்காமல் விடப்பட்ட மெழுகுவர்த்தியால், வீடு தீப்பிடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 சிறுமிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் குயிலா கண்டேன்மெண்ட் பகுதியில் அமைந்துள்ளது காலிதாம் கோவில். இந்த கோவிலின் அருகே வீடொன்றில், நான்கு சகோதரிகளும், அவர்களுடைய உறவுக்கார சிறுமிகள் இருவரும் தங்கி இருந்துள்ளனர்.

இவர்களது பெற்றோர் பக்கத்து ஊரில் நடைபெற்ற திருமண நிகழ்சிக்கு சென்றதால், சிறுமிகள் மட்டும் தனிமையில் இருந்துள்ளனர். அப்போது, இரவு உறங்கச் செல்வதற்கு முன்னால் மெழுகுவர்த்தியை அணைக்க சிறுமிகள் மறந்து விட்டதாகத் தெரிகிறது.

இதனால், அதில் இருந்து பற்றிய தீ, வீடு முழுவதும் பரவியது. அதிகாலை நேரத்தில் ஏற்பட்ட இந்த தீவிபத்தைக் கண்டு அக்கம் பக்கத்தார் அதிர்ச்சி அடைந்தனர்.

தீயை அணைக்க அவர்கள் முயற்சித்தனர். அப்போது எதிர்பாராத விதமாக வீட்டில் மேற்கூரை இடிந்து விழுந்தது. இதில், வீட்டில் இருந்த ஆறு சிறுமிகளும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியாகினர்.

தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு சிறுமிகள் பலியான இந்தச் சம்பவத்தால் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)

## சதுர சேனாரத்னாவுடன் இணைந்து மு.த.தே.கட்சி மேதினக் கூட்டம்

இவ்வருடம் மே 1 ஆம் திகதி உழைப்பாளர் தினத்தினை ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான சதுர சேனாரத்னவு டன் இணைந்து முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் தலைவர் மருசிலின் அன்ரனி தலைமையில் கொழும்பு ரவுண் கோல் மைதானத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

பி.ப.03.00 மணியளவில் ஊர்வலம் ஆரம்பமாகி கூட்டம் நடைபெறும் மைதானத்தை அடைந்தவுடன் மேதினக் கூட்டம் நடைபெறும் இதில் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும், சுகாதாரத்துறை அமைச்சருமான ராஜித சேனாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்பதுடன் எமது கட்சியின் உறுப்பினர்களும் பெரும் திரளான ஆதரவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் செயலாளரும் முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந் அறிவித்துளளார். (இ-5)

## குடும்பஸ்தர் படுகாயம்

மணல் ஏற்றச் சென்ற உழவு இயந்திரம் தடம்புரண்டு விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் வவுனியா வெள்ளாங்குளம் 3 ம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் மேற்கினைச் சேர்ந்த ஏழு பிள்ளையின் தந்தையான நவரத்தினம் நிரஞ்சன் (வயது 33) என்றவரே படுகாயமடைந்தவராவார். (இ-30)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-29.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.60 | 147.42 |
| பிரிட்டன் | பவுண்ட் | 208.73 | 217.17 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 162.60 | 168.09 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 148.06 | 154.24 |
| கனடா | டொலர் | 113.94 | 118.69 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 108.81 | 113.90 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.65 | 110.72 |
| இந்தியா | ரூபா | 2.1653 | ------- |
| சீனா | யுவான் | 22.2291 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 476.7584 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5178 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3698 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 70 | 40 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 | 90 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 50 | 60 | 80 | 100 | 80 |
| தக்காளி | 120 | 100 | 90 | 80 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 45 | 60 | 50 | 80 | 50 |
| கோவா | 60 | 100 | 70 | 100 | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 15 | 25 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 30 | 30 | 65 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 80 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 60-100 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 70 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 60 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 30 | 80 | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 240 | 250 | 300 | 250 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 180 | — | 300 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 30 | 50 | — | 60 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 200 | 400 | 400 | 350 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 20-40 | 50 | 40 | 30-35 | 40 |
| இராசவள்ளி | 120 | 250 | 100 | 160 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 50 | 40 | 70 | — | 120 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை கடற்படையின் 2 போர்க்கப்பல்கள் குண்டு வைத்து தகர்ப்பு 169

எனவே, ஆரம்பப் பேச்சுக்களை நடத்துவதற்கு எம்மால் சான்றாக்கப்பட்ட பிரதிநிதிகளாகக் கீழ்க்காணும் நபர்களை நாம் நியமிக்கின்றோம். உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் புதுப்பித்தல் பணிகள் முன்னெடுக்கப்படுவது எவ்வாறு என்ற வகை மாதிரிகளைத் தங்களால் பெயர் குறிப்பிடப்படுபவர்களும் எமது பிரதிநிதிகளும் கலந்தாராவும் முடியும். பின்வருவோர் எமது பிரதிநிதிகளாவர்.

1.கே.கரிகாலன், அரசியல் பிரிவின் பிரதிநிதித் தலைவர்.

2.எஸ்.இளம்பரிதி, யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அமைப்பாளர்.

3.ஏ.ரவி, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைவர்.

4.எஸ்.டோமினிக், தலைவர், பொது நிர்வாகக்களம்.

மேலும் தங்களது கடிதத்தில், யுத்த நிறுத்தம் பற்றி நாம் தெரிவித்த ஆலோசனை குறித்து எதுவும் குறிப்பிடாதது பற்றி நாம் கவலையோடு நோக்குகின்றோம். சமாதானம் நல்லெண்ணம் மற்றும் பொது மக்கள் வாழ்வின் இயல்பு நிலை ஆகியவற்றுக்கு பகைமைத் தவிர்ப்பு என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தாங்கள் உணர்வீர்கள்.

இவ்விடயத்தைத் தாங்கள் கருத்தில் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 2 கப்பல்களை விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

பிரதமர் சந்திரிகாவுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்றது. இருதரப்பினருக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன.

### 3 நிபந்தனைகள்

பேச்சுவார்த்தைக்கு வர விடுதலைப்புலிகள் தரப்பில் 3 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அவை வருமாறு:-

1.யாழ்ப்பாணத்துக்கு 4 ஆண்டுகளாக இருந்து வரும் பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.

2. போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.

3.மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டிருந்த 42 பொருட்களில் மண்ணெண்ணெய், சோப், மெழுகுவர்த்தி, பற்றரி உட்பட 28 பொருட்களுக்கான தடையைச் சந்திரிகா நீக்கினார்.

### சந்திரிகா ஆலோசனை

1.9.94 அன்று இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகா ஆலோசனை நடத்தினார். விடுதலைப்புலிகளுடன் போரிடும் தளபதிகளும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஏறத்தாழ 4 மணி நேரத்துக்கும் மேல் இந்த ஆலோசனை நீடித்தது.

அப்போது விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யக்கூடாது என்று இராணுவ தளபதிகள் எதிர்ப்பு தெரிவித்ததாகத் தெரிகிறது.

போர் நிறுத்தம் செய்தால் விடுதலைப்புலிகள் அதைப் பயன்படுத்தித் தங்கள் படை பலத்தைப் பெருக்கிக்கொள்வார்கள். 1990 ஆம் ஆண்டு 13 மாத காலம் போர் நிறுத்தம் செய்தபோது அவ் வாறு செய்தார்கள் என்று சந்திரிகாவிடம் தெரிவிக்கப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

### மோதல்

சமரசப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடு நடைபெற்று வந்தபோதிலும் போர் நிறுத்தம் அறிவிக்கப்படவில்லை. எனவே விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடந்துவந்தது.

இந்த நிலையில் 8-9-94 அன்று பூநகரி என்ற இடத்தில் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையில் 35 விடுதலைப்புலிகள் பலியானார்கள். அடுத்து 16 ஆம் திகதி மட்டக்களப்புக்குத் தென்மேற்கு பகுதியில் இராணுவம் நடத்திய தாக்குதலில் 25 விடுதலைப்புலிகள் உயிர் இழந்தனர்.

### தற்கொலைப் படை

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக கடற்படை கப்பல் மீது பெரிய தாக்குதல் ஒன்றை 19-9-94 அன்று பௌர்ணமி இரவில் விடுதலைப்புலிகள் நடத்தினார்கள்.

விடுதலைப்புலிகள் தற்கொலைப் படை பிரிவைச் சேரந்த கடல் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள்.

### வெடிகுண்டுகளுடன் படகுகள் மோதல்

கடற்படையின் 20 அடி நீள சாகரவர்த்தன என்ற கப்பல் வடமேற்கு கடற்கரையில் வழக்கம் போல இரவில் ரோந்து சென்று கொண்டு இருந்தது. அதில் சுமார் 60 மாலுமிகள் இருந்தனர்.


அப்போது தற்கொலைப் படையினர் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட 2 படகுகளில் சென்று அந்தக் கப்பல் மீது மோதினார்கள். இதனால் கடற்படை கப்பல் வெடித்துச் சிதறி மூழ்கியது. தற்கொலைப் படையினர் சென்ற படகுகளும் தூள்தூளாகி விட்டன.

### 24 பேர் சாவு

இந்தத் தாக்குதலில் கடற்படை வீரர்கள் 24 பேர் பலியானார்கள்.

இறந்து போன கடற்படையினர் உடல்களைத் தேடும் பணியில் கடற்படை படகுகள் மற்றும் ஹெலிகப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன.


இந்தப் பணியின் போது 16 மாலுமிகள் மீட்கப்பட்டனர். இவர்களில் 3 பேர் படுகாயத்துடன் இருந்தனர் என்று இராணுவ அதிகாரி கெமுனு குலதுங்கா கூறினார்.



(தொடரும்)

# வங்குரோத்து நிலையை அரசு அடைந்துள்ளது

## விமல் எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சி என்ற பதத்தை பயன்படுத்த வேண்டாம் என்று கூறும் அளவுக்கு அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல வீரவன்ச எம்.பி.தெரிவித்துள்ளார்.**

எனினும் கூட்டு எதிர்க்கட்சி என்ற பதத்தை பயன்படுத்துவதற்கு ஊடக அமைச்சிடம் அனுமதிபெறத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த போது, கூட்டு எதிர்க்கட்சியை நிறுவிய போது அப்போதைய மகிந்தவின் அரசாங்கம், இவ்வாறான அறிக்கையை வெளியிடவில்லை என்றும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைக்கையிலேயே விமல் வீரவ்ன்ச இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

### நல்லாட்சி அரசாங்கத்தின்

# ஊடக அடக்குமுறை வெளிச்சமாகியுள்ளது

## நாமல் எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடக அடக்குமுறை வெளிச்சமாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

கூட்டு எதிர்க்கட்சி என்ற பெயரை ஊடகங்கள் பயன்படுத்தக் கூடாது என்பதன் மூலம் அரசாங்கத்தின் ஊடக அடக்குமுறை தெளிவாக உறுதியாகியுள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தையும் ஊடக சுதந்திரத்தையும் உறுதி செய்வதாக பிரசாரம் செய்து அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறியது.

எனினும் அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தையும் ஊடக சுதந்திரத்தையும் குழி தோண்டி புதைத்து வருகின்றது.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உண்மையான எதிர்க்கட்சி கூட்டு எதிர்க்கட்சியாகும்.

உண்மையாகவே நாட்டின் எதிர்க்கட்சியான கூட்டு எதிர்க்கட்சியை அவ்வாறு அழைக்க வேண்டாம் என ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுப்பது ஊடக சுதந்திரத்தை முழுமையாக பறிப்பதாகும்.

கூட்டு எதிர்க்கட்சி என்பது ஒரு அரசியல் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி என்ற ஊடக அமைச்சின் செயலாளரது கருத்து முற்றிலும் அடிப்படையற்றது.

மே தினமன்று கிருலப்பனைக்கு வந்தால் இலட்சக் கணக்கான ஆதரவாளர்களின் ஆதரவினை நேரில் பார்க்க முடியும்.

நாட்டின் மெய்யான எதிர்க்கட்சியை கூட்டு எதிர்க்கட்சி என அழைப்பதற்கு ஊடகங்களுக்கு தடை விதிப்பதன் மூலம் அரசாங்கத்தின் ஐந்து நட்சத்திர ஜனநாயகம் தெளிவாக அம்பலமாகியுள்ளது என நாம்ல் ராஜபக்ஷ சாடியுள்ளார். (இ-5)

# மண்டியிட நான் தயாரில்லை; கீதா குமாரசிங்க அறிவிப்பு



எவரிடமும் மண்டியிட நான் தயாரில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பெந்தர எல்பிட்டிய தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து கீதா குமாரசிங்க ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பெந்தர எல்பிட்டிய தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு வேறு ஒன்றும் காரணமல்ல.

எதிர்காலத்தில் இந்தத் தொகுதியை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காகவே எனது பதவி பறிக்கப்பட்டது.

தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து என்னை நீக்கியதன் ஊடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் என் மீது கை வைக்கவில்லை. வீரம் மிக்க பென்தர எல்பிட்டிய மக்களின் மீதே கை வைக்கப்பட்டுள்ளது.

தெற்கின் ஒரே பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கடமையாற்றி வரும் என்னைத் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்காவிட்டால் தலைவர்கள் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொளள முடியாது.

இதுவே என்னை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கக் காரணம். இந்த தீர்மானம் மிகவும் பிழையானது.

18 ஆண்டுகளின் பின்னர் பென்தர தொகுதியை 18ஆயிரம் மேலதிக வாக்குகளின் ஊடாக வெற்றியீட்டினேன். என்னை பதவி விலக்கி மக்களின் கன்னத்தில் சுதந்திரக் கட்சி தலைவர்கள் அறைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றியீட்டச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு வருகின்றனர். புதிதாக நியமிக்கப்பட்ட தொகுதி அமைப்பாளர்களினால் 5ஆயிரம் வாக்குகளையேனும் பெற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.(இ-5)

## இன்று ஒரு தகவல்

### தயங்கக் கூடாத சந்தர்ப்பங்கள்

ஓர் உதவியைத் தயங்கித் தயங்கிச் செய்வதற்கும் செய்யாமல் விட்டு விடுவதற்கும் வேறுபாடு எதுவும் இல்லை.

இதைச் செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்டேன்.மனிதர் கொஞ்சமும் தயங்காமல் உடனே அதற்கென்ன செய்து விடுவோம்! உங்களுக்கு உதவத்தானே நாங்கள் காத்திருக்கிறோம் என்று மனப்பூர்வமாகச் சொன்னதுடன் செய்தும் காட்டி விட்டார் என்று ஒருவர் நிறைவோடும் நன்றியுணர்வோடும் நெஞ்சம் நெகிழ்ந்தும் சொல்வதற்கும்,அப்பாடியா என்று இழுத்து, யோசித்து வேண்டா வெறுப்பாகவும் , கடனே என்றும் தலை விதியே என்றும் அவர் அந்த உதவியைச் செய்தார்.

என்று ஒருவர் வருந்திச் சொல்வதற்கும் இடையே எவ்வளவு வேறுபாடு? உதவி என்னவோ இருவருக்குமே செய்யப்பட்டு விட்டது.ஆனால் பலனடைந்தவர்களின் உள்ளங்களில் தான் எவ்வளவு வேறுபாடு!

ஒருவர் நூறு ரூபாய் கடன் கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே நாம் வங்கியில் இருந்து எடுத்துக் கொடுப்போமா? வீட்டிலிருந்து எடுத்துக் கொடுப்போமா? அல்லது யாரிடமாவது வாங்கிக் கொடுப்போமா? என்று நாம் ஒரு சில விநாடிகள் யோசிக்கக் கூடும்.

கடன் கேட்டவர் என்ன தெரியுமா எண்ணிக் கொள்வார்? நமக்குக் கொடுப்பதா? வேண்டாமா? என்று யோசிக்கிறார் என்பதாக எண்ணிக் கொள்வார். எனவே மேற்கூறிய விதிப்படி உதவி செய்தும் பயனில்லாமல் போகிறது.

உதவி கேட்டவரின் மனத்தில் வருத்தம் என்பது மாறாக் குறையாக உறைந்து போகிறது.

உதவி செய்வதா? வேண்டாமா? என்பதை நொடியில் முடிவெடுக்க வேண்டும். எதிராளி வாக்கியத்தை முடிக்கும் முன்னரே முடிவெடுத்துச் சொல்லிவிடுபவர்கள் சிலரை நான் பார்த்திருக்கிறேன்.இது ஓர் அபூர்வ ஆற்றல் என்பதில் ஐயமில்லை. இதை நாம் ஓரளவேனும் பெற வேண்டும்.

நம் சக்திக்கு உட்பட்ட பட்சத்தில் எந்த ஓர் உதவியையும் மிக நெருங்கியவர்கள் கேட்கும் போது உடனே சரியென்று சொல்லி விட வேண்டும்.அதன் மூலம் வரக் கூடிய சிறு சிறு பிரச்சினைகளைப் பின்னர் தான் யோசிக்க வேண்டும்.

ஒருவேளை யோசித்துத் தான் பதில் சொல்ல வேண்டும்-எனக்கு பிரஸன்ஸ் ஆஃப் மைண்ட் என்று சொல்லப்படும் சமயோசித புத்தி என்பது இல்லை என்பதாக எவரேனும் சொல்வாரேயானால் அவர் மேற்கூறப்பட்ட சூழ்நிலையைச் சமாளிக்க ஒரு வழியுள்ளது. அது-

தொடர்புடைய கிளைக் கேள்வி ஒன்றைக் கேட்பது தான்.

நிஜமாகவா கேட்கிறீர்கள் என்ன ஆச்சரியமாக இருக்கிறதே? நீங்களாவது என்னிடம் உதவி கேட்பதாவது?

இப்படி ஏதாவது சில கேள்விகளைப் பெயருக்குக் கேளுங்கள்.அதற்குள் கேட்கப்பட்ட உதவியைப் பற்றிச் சிந்தித்து உதவ முடிவு செய்து விட்டால் பளிச்சென்றும், உதவி செய்ய இயலாத நிலையென்றால் தயங்கித் தயங்கியும் பதில் சொல்லுங்கள்.

ஒருவேளை இதுவும் முடியவில்லை என்றால் தயங்கிப் பிறகு செய்ய ஒப்புக் கொண்டதற்கான காரணத்தையாவது விளக்கி விடுங்கள். இதைச் செய்யாமல் செய்யப்படும் உதவி முழுமையான ஒன்றாக இராது.

**லேனா தமிழ்வாணன்**

# வார பலன்கள்-29.04.2016-05.05.2016

***உயர்ந்த எழுத்தாற்றல் கொண்ட மேஷ ராசி அன்பர்களே! செயல்களில் முயற்சி தீவிரமடையும் என்றாலும், முடிவுகள் உங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்காமல் போகலாம்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு, புதிய பொறுப்பு கள் மூலம் பணிச்சுமையும், கெடுபிடியும் அதிகரிக்கும். சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு பணியாளர்களின் ஒத்துழைப்பு இருக்கும். விலைவாசி ஏற்றத்தாழ்வுகளால் கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெறும். பங்குச்சந்தையில் இருந்த நஷ்டங்கள் சரியாகும். கலைஞர்கள், பழைய ஒப்பந்தங்களிலேயே அதிக வருமானம் பெற்று மகிழ்வர். புதிய வாய்ப்புகள் பெற சகக்கலைஞர்கள் மூலம் முயற்சிகளை மேற்கொள்வார்கள். குடும்பத்தில் கடன் தொல்லை தலைதூக்கலாம். பெண்களுக்கு சிறு ஆரோக்கிய குறைபாடுகள் தோன்றி மறையும். உறவினர்களுடன் சுமுகமாக நடந்து கொள்வது உறவை பலப்படுத்தும். துர்க்காதேவிக்கு செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களும் தீபமிட்டு வழிபட்டால் நன்மைகள் நாடி வரும்.

---

***தருமம் செய்வதில் ஈடுபாடு மிகுந்த ரிஷப ராசி அன்பர்களே! சிறப்பான பலன்களை அடையும் வாரம் இது. நண்பர்கள் ஒத்துழைப்பு எதிர்பார்க்கும் அளவு இருக்காது.***




உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பார்த்த கடன்தொகை கிடைக்கும். வேலைப்பளு அதிகரித்தாலும், உற்சாகத்துடன் செய்வீர்கள். சொந்தத்தொழில் செய்பவர்கள், வேலைகளை விரைவாகச் செய்ய நவீனக் கருவிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்படும். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்றாக நடைபெற்று, எதிர்பார்க்கும் லாபம் காணப்படும். பங்குச் சந்தை வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பண வரவு கிடைக்கும். சகக்கலைஞர்கள் உங்கள் பணிகளில் ஆதரவுடன் செயற படுவார்கள். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை இருந்தாலும் சிறுசிறு பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். எதிர்பார்க்கும் முக்கிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு பிரச்சினைகள் சுமுகமாக தீரும். சூரிய பகவானை ஞாயிற்றுக்கிழமை அன்று வழிபாடு செய்பவர்களுக்கு சகல செல்வங்களும் வந்து சேரும்.

---

***கலைகளில் அதிக ஈடுபாடு கொண்ட மிதுன ராசி அன்பர்களே! வெள்ளி, சனி ஆகிய இருதினங்கள் சந்திராஷ்டமம் உள்ளதால், கொடுக்கல் -வாங்கலில் கவனம் தேவை.***




உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். செல்வாக்கு அதிகமாகும். சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். நிலுவையில் இருந்த தொகை வசூலாகும். கூட்டுத்தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு, போட்டியாளர்களால் லாபம் குறையக்கூடும். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான இலாபம் ஏற்படலாம். கலைஞர்கள், தங்கள் உடல் நலனில் அக்கறை காட்டுவது அவசியம். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் புனித ஸ்தலங்களுக்கு யாத்திரையாக செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம். சகோதரர் வழி உறவுகள் பலம் பெறும். சுப காரியங்களில் கலந்து கொண்டு நீண்ட கால உறவுகளை சந்திப்பீர்கள். சுதர்சன பகவானுக்கு புதன்கிழமை துளசி மாலை சூட்டி வழிபட்டால் சகல சம்பத்துகளும் உண்டாகும்.

---

***நேர்மையுடன் பழகும் குணமுடைய கடக ராசி அன்பர்களே! ஞாயிறு முதல் செவ்வாய் காலை 9 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால், எதிலும் அதிக நிதானம் தேவை.***




உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, சக ஊழியர்களின் பொறுப்புகளையும் சேர்த்துச் செய்யும் நிலை ஏற்படலாம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். பங்குச்சந்தையில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கலாம். கலைஞர்கள் புதிய பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவார்கள். புதிய வேலை வாய்ப்புகளும், பணவசதிகளும் கிடைக்கும். சகக்கலைஞர்களின் மூலம் பெரிய நிறுவனங்களில் வாய்ப்புப் பெற முயற்சி செய்வீர்கள். குடும்பத்தில் சிரமமில்லாமல் பணிகள் நடைபெறும். ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள பெண்கள் வெளியூர் சென்றுவர நேரலாம். ஆலய தரிசனமும், மகான்களின் ஆசிகளும் கிடைக்கும். மகாலட்சுமிக்கு வெள்ளிக்கிழமை நெய் தீபமிட்டு வழிபாடு செய்பவர்களுக்கு சகல நலன்களும் உண்டாகும்.

---

***பிறரிடம் வேலைவாங்கும் திறம் படைத்த சிம்ம ராசி அன்பர்களே! செவ்வாய் காலை 9 மணி முதல் வியாழன் பகல் 11.30 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால், பணவரவு தாமதமாகும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, அவசியமான வேலையை விரைவாக முடிப்பதில் அலைச்சல்கள் ஏற்படலாம். சொந்தத்தொழிலில் புதிய வாடிக்கையாளர் மூலம் முன்னேற்றம் ஏற்படலாம். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள், பங்குதாரர்களின் ஆலோசனையோடு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் சிறிது முன்னேற்றம் காணப்படும். கலைஞர்கள், பிரபல நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகளைப் பெற முயற்சி செய்வார்கள். சகக் கலைஞர்களுக்குப் பரிசளித்து மகிழ்வீர்கள். குடும்பச் செலவுகளை குறைப்பது பற்றி ஆலோசிப்பீர்கள். சலுகை விலைப் பொருட்களை வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். முருகப்பெருமானுக்கு செவ்வாய்க்கிழமை நெய் தீபமிட்டு வழிபட்டால் வந்தவினை அகலும்.

---

***ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்ட கன்னி ராசி அன்பர்களே! வியாழக்கிழமை 11.30 மணி முதல் சந்திராஷ்டமம் உள்ளதால், யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம்.***




உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கலாம். சக ஊழியர்களின் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சொந்தத்தொழில் செய்பவர்கள், புதிய நபர்கள் மூலம் அவசர வேலைகளைப் பெறுவார்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் ஏற்படலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் இருக்காது. கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற்றாலும், எதிர்பார்க்கும் வருமானம் தாமதமாகும். கடினமான பணிகளில் ஈடுபடும் போது கவனம் தேவை. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பணத் தட்டுப்பாடு காரணமாக செலவு களைச் சமாளிக்கக் கடன் வாங்க நேரிடும். பெண்களுக்கு சேமிப்பு செலவழியக் கூடும். ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவருக்கு வியாழக்கிழமை நெய் தீபமிட்டு வழிபாடு செய்பவர்களுக்கு சகல செல்வங்களும் வந்து சேரும்.

---

***முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட துலா ராசி அன்பர்களே! வரவை விட செலவு அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும்.***




உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பொறுப்பான பதவிகள் கிடைக்கக்கூடும். வீண்பேச்சுகளைத் தவிர்ப்பது அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்கள், முதலில் செய்து கொடுத்த பணியை, குறைபாடு காரணமாக மீண்டும் செய்ய நேரிடலாம். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும். பங்குச்சந்தை வியாபாரம் அதிக இலாபம் பெற்று மகிழ்வளிக்கும். கலைஞர்கள், புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து மகிழ்ச்சியடைவார்கள். குடும்பத்துக்கு தேவையான நவீன பொருட்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்படும். தாய்வழியில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது, பெண்கள் கவனமாக பேசுவது நல்லது. ஆஞ்சநேய சுவாமிக்கு சனிக்கிழமை வெற்றிலை மாலை சூட்டி வழிபட்டால் சகல நன்மைகளும் உண்டாகும்.

---

***காரியங்களில் உற்சாகம் காட்டும் விருச்சிக ராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு நண்பர்களும், உறவினர்களும் ஆதரவுக் கரம் நீட்டுவார்கள்.***




உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவுடன் சில சலுகைகள் கிடைக்கலாம். காரியங்களில் முன்னேற்றம் காணப்படும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைகள் அதிகமாகும். புதிய நபர்கள் மூலம் பணவரவு கிட்டும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். பங்குச் சந்தை வியாபாரம் இலாபம் ஈட்டித்தரும்.கலைஞர்கள், புகழ்பெற்ற நிறுவனங்கள் தேடி வருவதால் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும். குடும்பத்தில் அமைதி காணப்பட்டாலும், சிறுசிறு பிரச்சினைகள் வந்து போகும். தாய் மாமன் வழி உறவுகளில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பெண்களுக்குப் புதிய உடைகளும், விலை உயர்ந்த பரிசுகளும் தேடி வரும். சகோதர வழி உறவு பலப்படும். சனிக்கிழமை நல்லெண்ணெய் தீபமிட்டு வழிபாடு செய்பவர்களுக்கு விரோதங்கள் மறையும்.

---

***பெரியவர்களிடம் பணிவு காட்டும் தனுசு ராசி அன்பர்களே! உங்கள் உழைப்பு பலன் கொடுக்கும். எதிர்பார்த்தபடி பணம் வந்து சேரும். வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர், அதிக ஆதாயமுள்ள வேலைகளில் சேர முயற்சிப்பார்கள். சக பணியாளர்களுடன் சுமுகமாக நடந்து கொள்வது நல்லது. சொந்தத் தொழிலில் புதிய நபர்களின் வருகையால், பொருள்வரவு உண்டு. கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு லாபம் அதிகமாகலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் ஏற்படும். கலைஞர்கள், சகக்கலைஞர்கள் மூலம் பெரிய நிறுவனங்களின் ஒப்பந்தங்களைப் பெற்று மகிழ்வர். குடும்பத்தில் மகிழ்வான போக்கு காணப்படும். பெண்கள் மலிவு விலைப் பொருட்களை வாங்கி சேர்ப்பார்கள். நீண்ட காலம் வராமல் இருந்த உறவினர்களின் வருகை மகிழ்வளிக்கும். தட்சிணாமூர்த்தி சுவாமிக்கு வியாழக்கிழமை அன்று நெய் தீபமிட்டு வழிபட்டால் எண்ணங்கள் வெற்றியாகும்.

---

***கட்டளை இடும் திறமை கொண்ட மகர ராசி அன்பர்களே! இதுவரை தடைபட்டு வந்த காரியங்கள், இனி லாபகரமாக மாற வாய்ப்புண்டு. முயற்சிக்கு ஏற்ற பலன்கள் கிடைக்கும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, உயரதிகாரிகளின் உதவியால் முன்னேற்றம் ஏற்படலாம். பணியில் கவனம் தேவை. சொந்தத்தொழிலில் வேலைப்பளு இருந்தாலும், அவற்றை சுறுசுறுப்பாக செய்வீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு லாபம் இருக்கும். பங்குச்சந்தை வியாபாரம் நல்ல பலன் தரும். கலைஞர்கள், புகழ்தரும் புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணவரவு பெறுவார்கள். பழைய கடனை அடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். சகக்கலைஞர்கள் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தில் குதூகலம் காணப்பட்டாலும், சிறு சிறு பிரச்சினைகளும் உண்டாகக்கூடும். பெண்கள், இதுவரை சேமித்தவற்றை சுப காரியங் களுக்காக செலவிடுவார்கள். முருகப்பெருமானுக்கு செவ்வாய்க்கிழமை நெய் தீபமிட்டு வழிபட்டால் பகை மறைந்து உறவுகள் வலுப்படும்.

---

***உயர்வான எண்ணம் கொண்ட கும்ப ராசி அன்பர்களே! சில காரியங்களில் மட்டுமே திருப்தியான பலன் கிடைக்கும். தகுந்த உதவியின்றி, சில காரியங்கள் தள்ளிப் போகலாம்.***




உத்தியோகத்தில் உள்ளவர்கள், சக பணியாளர்களின் வேலையையும் செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத்தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். ஓய்வின்றி உழைப்பீர்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள், பங்குதாரர்களை அனுசரித்து செயல்பட வேண்டும். தொழில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் ஓரளவு லாபம் தருவதாக இருக்கும். கலைஞர்கள், தங்கள் திறமையை வெளிப்படுத்த கடினமாக உழைப்பார்கள். புதிய ஒப்பந்தங்களை பெற தீவிரமாக முயற்சிப்பீர்கள். குடும்ப வாழ்வில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகன்று சுப விரயங்களைச் சந்திப்பீர்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலை தேடி வரக் கூடும். ஆரோக்கியக் குறை இருந்த பெண்கள் நலம் பெறுவர். மகாலட்சுமிக்கு வெள்ளிக்கிழமையன்று நெய் தீபமிட்டு வழிபாடு செய்தால் எண்ணங்கள் வெற்றியாகும்.

---

***நுண்கலைகளில் ஈடுபாடு கொண்ட மீன ராசி அன்பர்களே! செய்யும் காரியங்களில் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். பணவரவுகள் தாமதமாக கைக்கு கிடைக்கும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு பொறுப்புகளும், செல்வாக்கும் அதிகமாகும். சொந்தத் தொழில் செய்பவர்கள் மற்றவர்கள் பாராட்டும் விதத்தில் பணிகளை முடித்துக் கொடுப்பார்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் கூடுதலான லாபத்தைத் தரும். பங்குச்சந்தை வியாபாரம் பலன்தரும் வகையில் நடைபெறும். நண்பர்களின் ஆலோசனை லாபத்தை இரட்டிப்பாக்கும். கலைஞர்கள் உற்சாகத்தோடு செயலாற்றுவர். விலகிச் சென்றவர்கள் தேடி வரக்கூடும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் காணப்பட்ட சலசலப்புகள் மாறி கலகலப்புகள் உண்டாகும். பெண்கள் தாய்வீட்டுக்குச் சென்று மங்கலப் பொருட்களும், புதிய துணிகளும், பெற்று மகிழ்ச்சியுடன் திரும்புவர். லட்சுமி நரசிம்மரு க்கு புதன்கிழமை துளசி மாலை சூட்டி வழிபட்டால் எண்ணங்கள் எளிதாக வெற்றியடையும்.

**ஜோதிட 'சிம்மம்' கண்ணன்**

# நல்லாட்சியில் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நாட்டின் பொருளாதாரம் கடுமையான முறையில் வீழ்ச்சிய டைந்துள்ளமை மத்திய வங்கியின் அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது**

கடந்த நிதியாண்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து மத்திய வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இதில் கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.8 எனும் மிகக்குறைந்த வீதத்தில் காணப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் ஆடம்பர செலவுகளின் மத்தியிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7 புள்ளிகளுக்கு மேல் தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொளளப்பட்டிருந்தது.

எனினும் பொருளாதார தளம்பல்நிலை காரணமாக இந்த ஆட்சியில் கடுமையான வகையில் வளர்ச்சி வீதம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் நாட்டின் முக்கிய மூன்று துறைகளான விவசாயம் 5.5 வீத வளர்ச்சியையும் தொழில்நுட்பத்துறை 3 வீத வளர்ச்சியையும் சேவைகள் துறை 5.3 வீத வளர்ச்சியையும் எட்டியுள்ளன. இதேவேளை, நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளா தார வளர்ச்சி 5.8 வீதமாக இருக்கும் என்று மத்திய வங்கியின் பொருளாதார அறிக்கையில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (இ-5)

# மேதினக் கூட்ட பாதுகாப்பிற்கு 5000 பொலிஸார் கடமையில்

மேதினக் கூட்ட பாதுகாப்பு பணிகளில் 5 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

மே தினக் கூட்டங்கள் மற்றும் மே தின பேரணிகள் போன்றவற்றுக்கான பாதுகாப்பிற்காக இவ்வாறு 5 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நடைபெறும் மேதினக் கூட்டங்களுக்காக 3 ஆயிரத்து 100 பொலிஸ் உத்தியோகத்தர்களும், மோட்டார் போக்குவரத்து கடமைகளுக்காக ஆயிரத்து 900 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மே தினக் கூட்டங்களின் போது குழப்ப நிலைமைகள் ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்த கலகத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் நேரடிக் கண்காணிப்பில் மேதினக் கூட்டங்கள் தொடர்பான பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-5)

# பொறியில் சிக்குண்ட நிலையிலிருந்த சிறுத்தை வனத்துறையினரால் மீட்பு

(கொழும்பு)



நோவுர்ட் வென்சர் தோட்டத்தில் வலையில் சிக்குண்ட நிலையில் இருந்த சிறுத்தை ஒன்றை வன விலங்கு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

வனப்பகுதியொன்றில் வேட்டைக்காக அமைக்கப்பட்டிருந்த பொறி வலையில் சிக்குண்ட நிலையில் நேற்று முன்தினம் காலை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக நோர்வுட் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

5 அடி நீளமும் 3 அடி உயரமும் கொண்ட மேற்படி சிறுத்தையானது இனம் தெரியாதோரால் மிருகம் வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த வலையில் சிக்குண்ட நிலையில், பிரதேச மக்கள் கண்டு நோர்வுட் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

மேலும், வலையில் சிக்குண்ட நிலையில் இருந்த மேற்படி சிறுத்தை உயிருடன் நல்லதண்ணி வன விலங்கு பாதுகாப்பு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (இ-5)


# இளைஞர் விளையாட்டு விழா

பருத்தித்துறை 28 ஆவது பிரதேச இளைஞர் விளையாட்டு விழா இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை 30 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். பருத்தித்துறை பிரதேச இளைஞர்கழக சம்மேளன அ.டில்ஷாந் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சீவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 706

Search for people, places and things Nagendram Home

மது



விமல்ராஜ்




கமல்




ராஜ்மோகன்



துவேனி



சிந்து



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# சிறுவர் அரங்கம்

## வரதட்சணை!

....ரவி தன் தந்தையை தனியே அழைத்துச் சென்று, "அப்பா! நான் முன்னமே இந்த வரதட்சிணை விவகாரமே வேண்டாம் என்று கூறியும் நீங்கள் கேட்கவில்லை. இப்போது பாருங்கள்! நமக்கு வர வேண்டிய பணமும்



போயிற்று. உங்கள் பணமும் திருட்டுப் போய்விட்டது.

போனது போகட்டும்! நம் சம்பந்தி எத்தனையோ சிரமப்பட்டு நமக்காக ஏற்பாடு செய்த வரதட்சிணை அநியாய மாகக் களவு போய்விட்டது. இந்த விடயத்தை இத்துடன் விட்டுவிடுங்கள்! முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது!" என்றான். ரவியின் தந்தை அரை மனத்துடன் சம்மதித் தார். குறித்த முகூர்த்தத்தில் திருமணமும் நடந்தேறியது.

திருமணத்தன்று மாலை தன் கணவனுடன் தனியாக வண்டியில் செல்லும்போது, "மிக மகிழ்ச்சிகரமாக நடந்திருக்க வேண்டிய திருமணம் இப்படியாகி விட்டதே! அநியாய மாக பணம் களவு போய்விட் டது?" என்று வருத்தப்பட்டாள். அதைக் கேட்டு கடகடவென சிரித்த ரவி, "பணம் எதுவும் களவு போகவில்லை. இது நானும், உன் தந்தையும் சேர்த்து நடத்திய நாடகம்! உன் வீட்டிற்குப் பெண் கேட்க வந்திருக்கையில், எங்களை வழி அனுப்புவதற்கு உன் அப்பா வெளியே வந்தபோது, என் அப்பா தனக்குப் பரிச்சய மான ஒருவர் தெருவில் சென்று கொண்டு இருந்ததைப் பார்த்து, அவருடன் பேச ஆரம்பித்தார்.

அந்த சமயம் நான் உன் அப்பாவிடம் என்னுடைய திட்டத்தை ரகசியமாகக் கூறி னேன். உண்மையில், மீசைக்காரர் எனக்கு நன்கு பழக்கமானவர். அவரைக் கொண்டு இப்படியொரு நாடக மாடத் திட்டமிட்டேன்.

நாங்கள் போட்டத் திட்டப் படி, தனக்கு இருமல் வருவது போல் அவர் நடிக்க என் அப்பா தண்ணீர் எடுத்து வர வெளியே சென்றார்.

நான் அதற்கு முன்னதாகவே அப்பாவின் பெட்டியிலிருந்து ஐயாயிரம் ரூபாய் எடுத்து அவரிடம் தந்துவிட்டேன். பிறகுதான் அவர் உன் அப்பாவின் அறைக்குள் சென்றார். உண்மையில் உன் அப்பாவிடம் வரதட்சி ணைப் பணமே இல்லை. பணம் திருட்டுப் போய்விட் டது போல் நடித்தார். என்னு டைய அப்பாவும் பணத்தைத் திருட்டுக் கொடுத்திருந்த தால், உன் அப்பாவின் வரதட்சிணைப் பணம் திருட் டுப் போனதை அப்ப டியே நம்பிவிட்டார். நமது திருமண மும் நன்கு முடிந்தது!" என்றான்.

"அப்படியா? எனக்காகவா இப்படியொரு நாடகம் நடத்தி னீர்கள்! பாவம்! அந்த மீசைக் காரர் என்றாவது பிடிபட்டால?" என்றாள் கமலா ! "கவலைப் படாதே! அவர் பிடிபடமாட்டார்! அவர் ஒரு கைதேர்ந்த நாடக நடிகர்! அன்று அவருடைய கிருதா, மீசை எல்லாம் போலி! அவர் எடுத்துப் போன ஐயாயிரத் தையும் பிறகு அவர் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்!" என்றான் ரவி. (முற்றும்)




- 313 - உரோமப் பேரரசின் மன்னன் லிசீனியஸ் அனைத்து கிழக்கு உரோமப் பேரரசையும் ஒனறாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.
- 1006 - மிகவும் ஒளி கூடிய சுப்பர்நோவா எஸ்.என 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.
- 1483 - இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்று வட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23, 1503 வரை அங்கு இருந்தது.
- 1803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடமிருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது.
- 1838 - நிக்கராகுவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொலை செய்து கொண்டார். சோவியத் படையினர் பெர்லினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினர்.
- 1975 - வியட்நாம் போர்: கம்யூனிசப் படைகள் சாய் கோன் நகரைக் கைப்பற்றினர். தென் வியட் நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.
- 1982 - திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1993 - ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக் கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.
- 1999 - ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.
- 2006 - ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரியநாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1777 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலாளர் (இ. 1855)
- 1870 - தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப் படத் துறையின் முன்னோடி (இ. 1944)
- 1959 - சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22ஆவது பிரதமர்

**இறப்புகள்**

- 1945 - அடெல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி. 1889)
- 1961 - லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து அடிகள் (பி. 1896)

### லோங் அடிகள்- யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து அடிகள்

அதி வணக்கத்துக்குரிய லோங் அடிகள் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய ஓர் அயர்லாந்து அடிகள் ஆவார்.

1896 இல் அயர்லாந்திலுள்ள லிமெரிக் என்னுமிடத்தில் பிறந்த இவர் 1920 இல் திருநிலைப்படுத்தப்பட்டார். 1921 இல் பத்திரிசி யார் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

பட்டப் படிப்பக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முடித்தா்ர் கலை முதுமாணிப் பட்டமும் பெற்றார். 1936 முதல் 1954 வரை 18 ஆண்டுகள் பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக மாபெரும் கைத்தொழிற் களியாட்ட விழாவை நிகழ்த்தியவரும் இவரே. அயர்லாந்தின் யாழ்ப் பாணத்தான் என்று அழைக்கப்பட்டார். பின்னர் ஆஸ்திரேலியாவுக்குப் பணியாற்றச் சென்றார்.

1961 இல் லண்டனில் காலமான இவர் அயர்லாந்தில் அடக்கம் செய்யப்பட்டார். 1990 இல் இலங்கைத் தேசிய வீரர் தினத்தன்று இவரது நினைவாக தபாற்தலையொன்று வெளியிடப்பட்டது.

# SLEAS போட்டிப் பரீட்சைக்கான உதவிக் குறிப்புக்கள்

# பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டில் தரவட்டம் (Quality Circle)

*கடந்த பல நாட்களாக வலம்புரியில் கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையிலான குறிப்புக்களையும், மாதிரி வினாக்களையும் வாசித்து அவற்றின மூலம் நன்மை அடைந்த பல ஆசிரியர்களும் அதிபர்களும் "தரவட்டம" பற்றிய செயற்பாடுகளை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான குறிப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டதன் பேரில், "பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டில் தரவட்டம்" என்ற கட்டுரை பிரசுரமாகின்றது.*



நடராஜா அனந்தராஜ்
B.A.(Hons.), M.A
Dip-In-Edu., Dip-In Jour
SLPS, SLEAS

இன்று தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் கல்வித் தரம் பின்னடைவாக உள்ளது என்றும், பாடசாலைகளின் தரமேம்பாடு ஏனைய சிங்களமொழிப் பாடசாலைகளை விட எல்லா விடயங்களிலும் பின்தங்கியுள்ள நிலையே காணப்படுகின்றது என்பன தொடர்பாகவும் அண்மைக்காலத்தில் வெளி வந்து கொண்டிருக்கும் அறிக்கைகளையும், ஊடகங்களின் கருத்துக்களையும் பார்வையிட்ட பின்னர் அவற்றுக்கான காரணங்களுக்கும் நாங்களே பொறுப்பேற்பவராகவும் வகை கூறுபவர்களாகவும் இருக்க வேண்டும். உலக நாடுகளின் கல்வித் தரத்திற்குச் சமமான நிலைக்கு இலங்கையின் கல் வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலக்கில் பல நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சு காலத்திற்குக் காலம் பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான பல சுற்றறிக்கைகளையும், பயிற்சிகளையும் அனுப்பி வைத்துள்ள போதிலும், அவற்றை முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்ளாததாலும், புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டாததாலும், அவற்றைத் தமது ஆசிரிய ஆளணியினருடன் கலந்து பேசி நடைமுறைப்படுத்தாமையாலுமே தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் அபிவிருத்தியிலான தேக்கநிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது என்பதைக் கல்விச் சமூகம் உணர்ந்து செயற்பட வேண்டும். இந்த நிலையில் பாடசாலைகளின் தரமேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக தரவட்டச் செயற்பாடுகளை ஒவ்வொரு பாடசாலையும் முன்னெடுத்து வந்தால், குறுகிய காலத்திற்குள் எமது இழந்த கல்வியை மீட்டெடுக்க முடியும்.

இது ஆரம்பத்தில் உற்பத்தித் துறையிலான குறைபாடுகளை நீககுவதற்கான நடைமுறைகளை வினைத்திறனுடன் கையாண்டு அவற்றைச் சீர்செய்தலில் பணியாளர்களின் பங்கேற்புடன், நடைமுறைப்படுத்திப் பின்னர் படிப்படியாக ஏனைய துறை சார்ந்த நிறுவனங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடைமுறையினூடாக, நிறுவனங்களின் உற்பத்திகளின் தரத்தை உயர்த்துதல், விற்பனையை அதிகரித்தல், வாடிக்கையாளர் சேவைகளுக்கான திறனை உயர்த்துதல், பணியாளர்களின் நலன்புரிச் சேவைகளை மேம்படுத்தல் போன்ற துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அவற்றின் வெற்றியைத் தொடர்ந்து, தரவட்டச் செயற்பாடுகள் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், பௌதீகவள, மனித வலு விருத்தி, மற்றும் தொடர்ச்சியான கண்காணித்தல் நடவடிக்கைகள் மூலம் மாணவர்கள், ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரித்து, அதன் இறுதி இலக்கான கல்வி அபிவிருத்தியை உயர்த்தும் நோக்கில் இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான பயிற்சிகளும், அறிவுறுத்தல்களும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமல்லாது, இணைபாடவிதானச் செயற்பாடுகள், கலை பண்பாட்டுச் செயற்பாடுகள், மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களைப் பேணுதல் போன்றவற்றில், ஆசிரியர்களிடையே ஒன்றிணைந்த செயற்பாட்டினூடாக பாடசாலையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் தரவட்டச் செயற்பாடுகள் பயன்படுகின்றன. ஆசிரியர்கள் பாடசாலை நேரத்திற்குப் புறம்பாகப் பாட வேளைகள், முடிந்த பின்னர், வாரத்திற்கு ஒரு தடவை ஒரு மணித்தியாலமாவது சந்தித்து தமது கற்றல் கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடி அவற்றின் ஊடாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, பிரச்சினைகளுக்கான அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைக் காண்பர். இதனூடாக ஒரு பாடசாலையின் ஒட்டு மொத்தமான தர மேம்பாடு அல்லது ஆற்றுகை மேம்பாடு ஏற்படுத்தப்படுவதால், ஆசிரியர்கள் அல்லது ஒரு நிறுவனத்தின் பணியாளர்கள் தமது வேலையில் ஏற்படும் திருப்தி நிலை காரணமாக ஊக்குவிக்கப்படுவர்.

**தரவட்டம் என்றால் என்ன?**

தரவட்டம் என்பது ஒரு பாடசாலையில் எதிர்கொள்ளப்படும், சவால்கள், பிரச்சினைகள் தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்த்து அதன்மூலம், தமது தொழில் சார்ந்த பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவும், ஆசிரியர்களின் திறமைகள் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்காகவும் அவற்றின் மூலம், நிறுவனப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காகவும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம், இணைந்து செயற்படும் சிறிய எண்ணிக்கையிலான ஆசிரியர்களைக் கொண்ட குழுவாகும்.

பாடசாலை மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ அணுகுமுறையில், ஆசிரியர் தரவட்டமானது, கீழிருந்து மேல் நோக்கிய முகாமைத்துவ அணுகுமுறையாகக் (Bottom up approach) காணப்படுவதால் இது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு முறையாகும்.

அத்துடன் அது,

- பங்கேற்பு அணுகுமுறையாகவும்
- படிப்படியாக மேல்நோக்க மேல்நோக்கி நகரும் அணுகுமுறையாகவும்
- ஒவ்வொரு ஆசிரியரை யும் பாடசாலைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தும் முகாமைத்துவ அணுகு முறையாகவும் காணப்படுகின்றது

பாடசாலைகளில் கற்றல் செயற்பாட்டை வினைத்திறனுடைய தாக்குவதற்காக தரவட்டம் இலங்கையில் முதன்முதலாக 2011 இல் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தரவட்டத்தின் செயற்பாடுகளாகப் பின்வரும் விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளன:

- தரவட்டத்தில் 4-12 அங்கத்தவர்கள் இருப்பர். அதற்கென ஒரு தலைவரும், செயலாளரும் நியமிக்கப்படுவர்:
- ஒரு பாடசாலையில் தேவைகளின் அடிப்படையில் பொருத்தமான பெயர்களைப் பயன்படுத்தி பலவேறு. தரவட்டங்கள் அமைக்கப்படலாம்.
- பாடசாலை மட்டத்தில் செயற்படுத்துவது தொடர்பான பயிற் சிகள் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்
- தரவட்டம் தொடர்பான கலந்துரையாடலின் பொழுது, வகுப்பறையில் அல்லது பாடசாலையில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான பல்வேறு வழிமுறைகளை இனங்கண்டு, அவற்றுள் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்வர்.
- உதாரணமாக பாடசாலைகளில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளாக கல்வித் தரத்திலான பின்னடைவு, மெல்லக்கற்போர் அதிகளவில் காணப்படுதல், வாசிக்க முடியாது இடர்படுதல், மாணவர்களின் இடைவிலகல், முறையான சீருடைகளில் வருகைதராமை, ஒழுக்கமின்மை, நூலகங்களைப் பயன்படுத்தாத தன்மை, வினைத்திறனற்ற தொடர்பாடல் திறன்கள், பாடசாலைக்குத் தாமதமாக வருதல், அல்லது வரவின்மை, மாணவர்களின் தூய்மை, கல்வியில் நாட்டமின்மை போன்றவை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள தரவட்டக் குழுவினால் ஆராயப்படும.
- இத்தகைய இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதிபரிடம் கையளிக்கப்படும். இதனால் பாடசாலை ஆசிரியர்களிடையே பங்கேற்பு அணுகுமுறை காணப்படுவதால், எந்த ஒரு திட்டத்தையும் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படாது.
- வாரத்திற்கு ஒரு நாள் பாடசாலை விட்டதும், ஆசிரியர்கள் குழுரீதியாகச் சந்தித்து அந்த வாரத்தில் பெற்ற அனுபவங்களை அல்லது சந்தித்த பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதனூடாக அடுத்த வாரத்திற்கான திட்டமிடலை முன்னெடுக்கக் கூடியதாக இருப்பதால் இந்த நடைமுறையை ஆசிரியர்கள் தவறாது பின்பற்ற வேண்டும்.
- பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களினதும் பங்கேற்பு அணுகுமுறையூடாக முகாமைத்துவச் செயற்பாட்டில், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டு பாடசாலையை சகல துறைகளிலும் மேம்படுத்தவேண்டியது ஒரு அதிபரின் கைகளிலேயே தங்கி யுள்ளது.

**தரவட்டத்தின் செயற்பாடுகள்:**

- ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் பொழுது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்காண்பதும், அவற்றைத் தீர்ப்பது தொடர்பான ஆய்வுரீதியான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- ஒரு பாடசாலையில் ஒவ்வொரு குழுவும் பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டிருப்பர். அவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தி, அதற்கு அமைய முதலில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையை தேர்ந்தெடுத்தல்.
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமானதாக உள்ள இலக்கு அல்லது சுட்டிக்கு அமைய அவற்றிற்கான செயற்பாட்டுத் திட்டங்களை வகுத்தல்.
- செயற்றிட்டங்களை பாடசாலை அல்லது வகுப்பறை மட்டத்தில் அமுல்படுத்தலும் அதற்குரிய அறிக்கைகளைப் பேணுதலும்.
- முன்னேற்ற மீளாய் வு களை மேற்கொள்வதன் மூலம், செயற்பாட்டின் பின்னடைவு களை இனங்காணுதல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வுகளில் காணப் படும் குறைபாடுகள் தொடர்பான காரணங்களை அறிந்து அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் அவற்றைப் பூரணப்படுத்தல.
- இவ்வாறு தொடர்ச்சி யாக பிரச்சினைகளை இனங் காணக் கூடிய ஆற்றல்களையும், அவற்றிற்கான தீர்வுகளையும் நடைமுறைப் படுததும் பயிற்சி ஏற்படும் பொழுது, பிரச்சினைகள் என்பது ஒரு பாடசாலையில் குறைந்து கொண்டு வரும். இதனால், அடுத்துவரும் பிரதான மான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட புதிய இலக்குச சுட்டிக்கு அமைய தொடர்ச்சியான அபிவிருத்திச் செயற்பாடுகளில ஈடுபடக்கூடியதாக இருக்கும்.
- தரவட்டச் செயற்பாடுகளை மீளாய்வுக்குட்படுத்தி தேவைப்படும் ஊக்குவிப்புக்களை பாடசாலையின் முகாமைத்துவக் குழுவுக்கு வழங்குவதன் மூலம் பாடசாலையின் உள் முரண்பாடுகள் ஒருபோதும் ஏற்படாது.

ஆசிரியர்களுக்குத் தரவட்டம் அமைக்கப்பட்டுள்ளது போல் மாணவர்களிடையேயும் இவ்வாறான தரவட்டத்தைப் பாடசாலைகளில் செயற்படுத்தினால், மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை அவர்களே இனங்கண்டு, அவற்றிற்கான தீர்வையும் அவர்களே காண்பதால், பாடசாலையில் ஒழுங்கு கட்டுப்பாடுகளைப் பேணுவது என்பது அதிபர்களுக்கும், பாடசாலை முகாமைத்துவக் குழுவுக்கும் இலகுவானதாக இருக்கும். இதற்கு சிறந்த தலைமைத்துவப் பயிற்சியினூடாக உருவாக்கப்பட்ட மாணவர் தலைவர்கள் முறைமையினை அதிபர்கள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தினால், மாணவர்களால் ஏற்படுத்தப்படும், பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

தரவட்டத்தைப் பாடசாலைகளில் செயற்படுத்தும் பொழுது பின்வரும் விடயங்கள் ஒரு ஒழுங்கு முறையில் உள்ளடக்கப்படுவதை அதிபர்கள் உறுதிப்படுததிக் கொள்ள வேண்டும்:

- தரவட்டம் ஆரம்பித்த திகதி
- தரவட்டத்தில் கலந்துரையாடப்படும் தலைப்பு:
- தரவட்டத்தில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை
- குறித்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ள தரவட்டக் குழுவின் நோக்கங்கள்
- தரவட்டக்கலந்துரையாடலின பொழுது இனங்காணப்பட்ட பிரச்சினைகள்
- இனங்கண்டு முன்னுரிமைப்படுத்திய பிரச்சினைக்கு பரிந்துரைக்கப்பட்ட தீர்வுகள்
- பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட காலம்
- பிரச்சினைகளைத் தீர்ப்பதறகான நடைமுறைகளைக் கையாளும்போது, பாடசாலை முகாமைத்துவக் குழுவின் மூலம் கிடைத்த அனுசரணை அல்லது உதவிகள்.
- தரவட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்தும் போது, பெறப்பட்ட நன்மைகள்
- தரவட்டம் வெற்றிகர மாக இடம்பெற்றதை உறுதிப்படுத்தக் கூடிய சுட்டி. உதாரணமாக விஞ்ஞான பாடத்தில் குறித்த வகுப்பு மாணவர்களின் சராசரி பெறுபேறு 45% ஆக இருந்து, தரவட்டச் செயற்பாடுகளில் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைப் பின்பற்றி நடைமுறைப்படுத்திய பின், அது 55% ஆக அதிகரித்திருந்தால், அந்த அதிகரிப்பின் நிலையே அதனது சுட்டிப் பெறுமானமாக இருக்கும்

எவ்வித பணச்செலவோ அல்லது, நேரவிரயமோ இன்றி இலகுவான தரவட்ட நடைமுறை யைப் பாடசாலைகள் தமது நாளாந்தச் செயற்பாடுகளாகப் பின்பற்றி வந்தால், கல்வித்தர மேம்பாடு ஏற்படுத்தப்படுவதுடன், அதிபர், ஆசிரியர்களுக்கான நிர்வாகப் பிரச்சினைகளுக்கும், மாணவர்களின் பிறழ்வான நடத்தைகளுக்கும், கற்றல், கற்பித்தலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கும் பெருமளவுக்குத் தீர்வு காணமுடியும்.

எனவே ஒரு பாடசாலையின் பண்புசார் முகாமைத்துவத்தின் ஒரு கூறாக 'ஆசிரியர் தரவட்டம்' என்பது அமைந்துள்ளதால், அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி பாடசாலையின் விளைதிறனை (Effectiveness) அதிகரிக்கும் ஆற்றலை முதல்தர முகாமையாளர் (First Line Manager) என்ற வகையில் ஒரு அதிபர் கொண்டிருக்க வேண்டும்.

# தமிழ் சினிமா வரலாறு

150

## சமூகப் படங்களுக்கு எம்.ஜி.ஆரை திருப்பிய "திருடாதே"

இந்தப்படம் உருவானதில் ஒரு கதையே அடங்கியிருக்கிறது.

இது பற்றி தமிழரசு கழகப் பிரமுகரும் பட அதிபரும் பிற்காலத்தில் அகில இந்திய சிவாஜிகணேசன் ரசிகர் மன்றத்தின் தலைவராக ஆனவருமான சின்ன அண்ணாமலை, ஒரு கட்டுரையில் கூறியிருப்பதாவது:-

**சக்ரவர்த்தி திருமகள்**


மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ராஜாராணி கதைகளில் நடித்து புகழ்பெற்றுக்கொண்டிருந்த சமயம்.

அவர் நடித்துக் கொண்டிருந்த சக்ரவர்த்தி திருமகள் என்ற திரைப்படத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

சக்ரவர்த்தி திருமகள் ஒரு ராஜாராணி கதைதான். எம்.ஜி.ஆர். தான் அதில் கதாநாயகன். அஞ்சலிதேவி கதாநாயகி. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்-மதுரம் அதில் நடித்தார்கள்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன் எனக்கு முன்னமேயே நல்ல பழக்கம் உண்டு.

எம்.ஜி.ஆருடன் நான் நெருங்கிப் பழகியது சக்ரவர்த்தி திருமகள் படப்பிடிப்பின் போதுதான் படப்பிடிப்பின் இடைவேளையில் அரசியலைப் பற்றி சலிக்காமல் விவாதம் செய்வார். படப்பிடிப்பு காலங்களில் தினமும் நாங்கள் ஒன்றாகவே சாப்பிடுவோம். அதனால் எம்.ஜி. ஆருடன் மிக நெருங்கிப் பழகவும் மனம் விட்டுப் பேசவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.



ஒரு நாள் எம்.ஜி. ஆரிடம் நீங்கள் ஏன் ராஜா- ராணி கதையிலேயே நடித்துக்கொண்டிருக்கிறீர்கள். நல்ல சமூகக் கதையில் நடித்தால் என்ன? என்று கேட்டேன்.

சந்தர்ப்பம் வந்தால் பார்க்கலாம் என்று சொல்லி பேச்சை வேறு திசைக்கு கொண்டு சென்றுவிட்டார்.

அப்போது எம்.ஜி. ஆர் பாகவதர் கிராப் தான் வைத்திருப்பார். எம்.ஜி.ஆருக்கு ஒரு 'பலவீன மனப்பான்மை இருக்கிறது என்று நான் யூகித்தேன். அதாவது தனக்கு சமூகக் கதைக்கு ஏற்ற முகம் இல்லை. தற்கால கிராப் வைத்தால் பார்க்க நன்றாக இராது.

கத்திச்சண்டை முதலியவைகள் சமூகக் கதையில் போட முடியாது.

அம்மாதிரி சண்டை இல்லை என்றால் படம் ஓடாது என்று எண்ணிக் கொண்டுதான், சமூகக் கதையில் நடிக்க முயற்சிக்கவில்லை என்று நான் எண்ணினேன்.

பின்னர் ஒருநாள் எம்.ஜி.ஆரிடம் நான் ஒரு சமூகக் கதை எடுக்கலாம் என்றிருக்கிறேன். தாங்கள்தான் அதில் நடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

**எம்.ஜி.ஆர். சம்மதம்**

எம்.ஜி.ஆர். சிறிது நேரம் யோசித்து சரி, தங்களுக்கு தைரியமிருந்தால் எனக் கொன்றும் ஆட்சேபனை இல்லை. நல்ல கதையாகப் பாருங்கள். என்று சொன்னார்.

(தொடரும்)

# வேட்டையாடப்படும் முன்னாள் புலிகளின் தளபதிகள்!





**அம்பாறை மாவட்டத்தில்**

கடந்த 24 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் திருக்கோவில் - தம்பிலுவில் பகுதியிலுள்ள புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி ராம் அவரது வீட்டிலிருந்த போது இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினரான ராம், 1990 ஆம் அண்டு ஜுலை மாதம் புலிகளிடம் சரணடைந்த 600 பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத விசாரணைப்பிரிவின் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள ராமிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலமாக இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பொத்துவில்.அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களை முற்றுகையிட்ட புலிகள் சகல சிங்கள முஸ்லிம் பொலிஸார்களையும் ஆயுதங்களையும் அள்ளிச் சென்றார்கள். அதன் பின்பு திருக்கோவிலுக்கு அடுத்த ஊரான விநாயகபுரத்தில் காட்டுப் பகுதியில் சகல பொலிசாரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது.

ஆணையிறவு மற்றும் பூநகரி இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தலைமை வகித்த ராம், யால தேசிய சரணாலயத்தில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களுடனும் தொடர்புபட்டிருக்கலாம் என கூறப்படுகின்றது.

கடந்த 24 ஆம் திகதி திருக்கோவில் - தம்பிலுவில் பகுதியிலுள்ள அவரது வீட்டிலிருந்தபோது இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து, கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட ராம், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

முன்னதாக, புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தளபதியாக செயற்பட்ட கருணா அம்மான் புலிகள் அமைப்பிலிருந்து விலகியதையடுத்து, ராம் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு ஆயுதப் பிரிவுக்குப் பொறுப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது .

கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட அவர், 2013 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணத்தில்**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சாள்ஸ் அன்டனி படைப் பிரிவின் சிறப்பு தளபதியான நகுலன் என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சிவமூர்த்தி என்பவர் அண்மையில் தெற்கு பகுதியில் உள்ள அவருடைய வீட்டிலிருந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் காணாமல் போயிருந்த சில தளபதிகளில் இவரும் ஒருவர் என கூறப்பட்டிருந்த நிலையில், நீர்வேலி பகுதியில் கடந்த சில வருடங்களுக்கு முன் இவர் திருமணம் முடித்திருந்தார்.

இந்நிலையில் சிவில் உடையில் நீர்வேலியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் நகுலன் என்ற முன்னாள் விடுதலைப் புலிகளின் தளபதியை கைது செய்துள்ளனர்.

**திருகோணமலையில்**

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் திருமலை புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர் கலையரசன் அண்மையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் கைப்பற்றப்பட்ட தற்கொலைத் தாக்குதல் அங்கி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள கலையரசன் என்பவர் ராமின் நெருங்கிய சகா என்றும் இருவரும் இணைந்து பல தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள கலையரசன் எனும் விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர் வன்னி யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடையவோ, புனர்வாழ்வுக்கு உட்படவோ இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தனது மனைவி பிள்ளைகளுடன் திருகோணமலையில் வசித்துக் கொண்டிருந்த அவர் கைது அண்மையில் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தற்கொலைத் தாக்குதல் அங்கி தொடர்பாக இதுவரை விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தக் கைதுகள் தொடரும் என்றும் வேட்டையாடல்கள் தொடரும் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

**இதன் பின்னணி என்ன ?**

பல வகையான நோக்கத்தின் அடிப்படையில் வடகிழக்கில் பயங்கரவாதம் தலைதூக்குவதாக ஒரு மாயையை உருவாக்கி படை யினரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தவும் மக்களை ஒரு அச்ச நிலையில் வைத்திருக்கவும் அந்நிய நாடு ஒன்றின் உளவுத் துறை இலங்கை பாதுகாப்புத் தரப்புக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இதன் பின்னணியில் தமிழ் மகளுக்கு விரோதமான சில தமிழ் தரப்பும் உள்ளது. அவர்களின் தகவல்களின் அடிப்படையில்தான் இந்தக் கைது தொடர்வதாக ஒரு தகவல்.

**எம்.எம். நிலாம்டீன்**

காலம் உண்மையைக் கண்டுபிடித்து
உலகிற்கு வெளிப்படுத்தி விடும்.
- லத்தீன் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இந்தியா தாமதித்தால் ஏனைய நாடுகள் தலையிடும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் இழுபறி நிலையிலேயே உள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தமிழின அழிப்பு தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் இன்னமும் முற்றுப்பெற வில்லை.

இதற்கான காரணம் இலங்கை அரசின் அசமந்தம் என்பதற்கு அப்பால்; இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் இறுக்கமான போக்கு என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

மகிந்தவின் காலத்தில் வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்திய அமெரிக்கா, ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சி வந்தபோது தனது இறுக்கத்தை தளர்த்திக் கொண்டது.

ஆக, போரில் பாதிக்கப்பட்ட- இழப்புகளைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பதை விட மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினால் அது போதும் என்ற நிலைப்பாடே அமெரிக்காவிடம் இருந்தது.

இதனால் மைத்திரியின் ஆட்சியில் அமெரிக்கா தமிழர்களை மறந்துவிட்டது என்றே கூற வேண்டும்.

இதற்கு மேலாக இந்தியாவை பொறுத்தவரை வன்னிப்போர் தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை இடம்பெறுவது அறவே விருப்பமில்லாத விடயமாகும்.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது எடுக்கப்பட்ட இந்த முடிவு பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியிலும் தொடர்கிறது. இந்தியாவுக்கு விருப்பமில்லாததை செய்வதற்கு அமெரிக்கா முன்வராது என்பதால் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு விருப்பமில்லாததாலேயே சர்வதேச போர்க்குற்ற விசாரணை கிடப்பில் போடப்பட்டுள்ளது என்ற உண்மை தமிழ் மக்களுக்கு நன்கு தெரியுமாயினும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் இந்தியா தாமதிப்பது ஏன் என்பது தான் புரியாது உள்ளது.

இந்தியாவை மீறி அமெரிக்கா எதிலும் தலையிடாது என்பது இந்தியாவுக்குத் தெரியும். அப்படியானால், இந்தியா எந்த வித காலதாமதமுமின்றி இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்த வேண்டும் அல்லவா?

இப்போது கூட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரை இந்திய மத்திய அரசு டில்லிக்கு அழைத்துள்ளதாக கேள்வி.

ஆனால், அந்த அழைப்பு சீனாவுடன் இலங்கை கொண்ட உறவை, சம்பூரில் அமுலாகும் அனல் மின் நிலையம் தொடர்பில் பேசுவதாக இருக்குமேயன்றி,

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்க்காதது ஏன்? என்று கேட்பதற்காகவல்ல என்பது நிறுதிட்டமான உண்மை.

எதுவாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்தியா கடைப்பிடித்து வரும் காலதாமதம் இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்குமான உறவை நிச்சயம் பாதிக்கும்.

இந்தியா உதவவில்லை என்ற நிலைமை நீடிக்குமாயின் வல்லமை பொருந்திய நாடுகளிடம் தமிழ் மக்கள் உதவி கேட்பது தவிர்க்க முடியாததே.

தான் செய்யாதவிடத்து தமிழ் மக்கள் வேறு நாடுகளிடம் உதவி கேட்பது நியாயமற்றது என்று இந்தியா கருதுமாயின் அதுதான் தர்மம் அற்றதாகும் என்பதே உண்மை.

# யாழ்.சின்மயா மிஷன் நடத்தும் பகவத்கீதை வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயாமிஷன் வலம்புரி பத்திரிகையின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு இடையே பகவத்கீதை வினாவிடைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

சின்மயா மிஷனின் நிறுவுநா பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை (08.05. 2015 முதல் 28.05.2016) முன்னிட்டு யாழ்.சின்மயாமிஷன் மேற்கொள்ளும் செயற்றிட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் வலம்புரி பத்திரிகையில் மேமா தம் முதலாம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தினமும் 2 வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் வெளிவரவுள்ளன. இப்போட்டி சம்பந்தமான விதிமுறைகள் வருமாறு,

வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களும் பங்கு கொள்ளலாம்.

பிரிவுகள்: கீழ்ப்பிரிவு - தரம் 6,7,8 மத்திய பிரிவு-9, 10,11, மேற்பிரிவு-தரம்-12,13

போட்டிப் பரீட்சை 22. 05.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 11 மணி வரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 14.05.2016க்கு முன் யாழ். சின்மயா மிஷனில் நேரில் வருகை தந்தோ அல்லது தொ.பே. இல.021 222 3447 அல்லது 076 645 6920 ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டோ பதிவுகளை மேற்கொள்ளலாம்.

போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்கள் 29.05.2016 இல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மாலை 4 மணி முதல் 7 மணிவரை நடைபெறவுள்ள நூற்றாண்டு விழாவில் வாய்மொழிமூலப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கோரப்படுவர்.

போட்டியில் பங்குபற்றும் சகல மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

வெற்றியீட்டுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# விவசாயிகளுக்கு விளையாட்டு விழா

வவுனியா கமநல வங்கியின் ஏற்பாட்டில் சிங்கள-தமிழ் புதுவருட விழாவை முன்னிட்டு விவசாயிகளுக்காக நடத்தப்படும் மாபெரும் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இதன்போது நீர்நிரப்புதல், பலூன் ஊதி உடைத்தல், ஊசி நூல் கோர்த்தல், பணிஸ் சாப்பிடல், கிடுகு பின்னுதல் தேங்காய் துருவுதல், நீர்த்துப் பெட்டி பின்னுதல், யானைக்கு கண் வைத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம், முட்டி உடைத்தல், சங்கீத கதிரை, கயிறு இழுத்தல், சாக்கோட்டம், உழவர் பாட்டு போட்டி, வினோத உடை ஆகிய நிகழ்வு கள் இடம் பெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-250)

# திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட வேண்டும்

மே தினத்திற்கு மறுநாளான நாளை மறுதினம் திங்கட்கிழமை விடுமுறை வழங்க வேண்டுமெனக்கோரி யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்க ளின் பணியாளர்கள் யாழ்.வணிகர் கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ் நகரில் உள்ள பல வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் கையெழுத்திட்டு வணிகர் கழகத்திற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

தொழிலாளர் தினம் ஞாயிற்றுக்கிழமை வருவதால் அன்றைய நாள் தமது விடுமுறை நாளாக இருப்பதாகவும் அன்றைய தினம் மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியுள்ளது.

எனவே அன்றைய விடுமுறை நாளை மறுநாள் திங்கட்கிழமை தங்களுக்கு விடுமுறை தினமாக அறிவிக்குமாறு அவர்கள் அந்த கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# மௌனம் கலைந்தது நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

மௌனம் கலைந்தது (சிறுகதைத் தொகுப்பு) நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ் நிலை ஆசிரியர் செல்விகுணாலினி குணரத்தினம் எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகவும் வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் சரஸ்வதி மோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# அங்குரார்ப்பண நிகழ்வும் புதிய நிர்வாகத் தெரிவும்

(பொற்பதி)

வடமராட்சி கடலோடிகள் ஐக்கிய சமூக சேவைகள் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வானது சுப்பர்மட கடற்றொழிலாளர் கேட்போர்கூட மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் போஷகர் எ.சி அரியகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதன் புதிய தலைவராக இளையதம்பி குமார, குருசாமியும் செயலாளராக செல்லத்துரை நற்குணமும் பொருளாளராக வேலும் மயிலும் விஸ்வலிங்கமும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இதன் நிர்வாக உறுப்பினர் 5பேர் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக ஜே/401 கிராம அலுவலர் கே.சீறீகந்தன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கடற்றொழிலாளர்கள் பெருமளவினர் கலந்து கொண்டனர். (இ-64)

# கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் 3 வருட கால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமை: விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றுக்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இணைந்த கணிதம், உயர்கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல்

விண்ணப்பதாரிகள் 31. 12.2015 ஆம் திகதியன்று 24 வயதிற்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவமானது பிரதிப் பதிவாளர், தொழில் நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்தை, மொறட்டுவ என்ற முகவரிக்கு 20.05.2016 இற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 29.04.2016 இல் வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து யாழ்.பிரதேசத்தில் கரணவாய், அண்ணாசிலையடி, குஞ்சர் கடை, பருத்தித்துறை CTB டிப்போ ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில குகன் நகர், ஊர்மிளா கோட்டம், மாமடுசந்தியிலிருந்து பதவியாவரை, CEC கல்லுடைக்கும் ஆலை, ஸ்ரீரங்கன் ஆலை, நல்ல தம்பி ஆலை, தெய்வேந்திரம் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




எழுந்திருங்கள், உழையுங்கள்- இவ் வாழ்வு எத்தனை நாள், இவ்வுலகில் வந்துவிட்டீர்கள். எனவே அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் என்ன வேறுபாடு? அவையும் தோன்றுகின்றன, கெடுகின்றன, இறக்கின்றன.

தைரியமாக இருங்கள்! எனது குழந்தைகள் எல்லாவற்றிற்கும் மேலாகத் துணிவாயிருக்க வேண்டும். எதற்காகவும் எள்ளளவும் விட்டுக் கொடுத்தல் உதவாது. மிகவுயர்ந்த உண்மைகளைப் பரப்புங்கள், எங்கும் வீசுங்கள். உங்கள் மதிப்பை இழப்பதையோ பிறரை வருத்துவதை எண்ணியோ அஞ்சாதீர்கள். உண்மையைக் கைவிடச் செய்யும் தூண்டுதல்களுக்கு நடுவிலும் அதைக் கைவிடாதிருந்தால் ஒரு தெய்வீக வலிமையை அடைவீர்கள் என்று உறுதி கொள்க. அவ்வலிமையின் முன்பு நீங்கள் உண்மையென நம்பாதவற்றை பற்றி உங்களிடம் பேசமக்கள் நடுங்குவார்கள். இடையறாது பதின்நான்கு ஆண்டுகள் உண்மையைக் கடுமையாகக் கடைப்பிடித்து அதிலிருந்து வழுவாமல் உங்களால் இருக்க முடிந்தால் நீங்கள் சொல்வதில் மக்களுக்குநம்பிக்கையும் உறுதியும் எழும்.

# யாழ். கே.கே.பி இளைஞர்கழகம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

## சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் சம்பியன்







யாழ்.கே.கே.பி இளைஞர் கழகம 51அணிகளைத் திரட்டி நடத்திய மாபெரும் துடுப்பாட்ட போட்டி தொடரின் இறுதிப் போட்டி சங் கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் குருநகர் ஜே எ சி அணிகளுக்கிடையில் அண்மையில் குருநகர் சென் றோக் மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சூழற்சியில் வெற்றி பெற்ற சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்க ளில் 2 விக்கட்டுகளை இழந்து 88 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக யுஷாந்த் ஆட்ட மிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குரு நகர் ஜே எ சி அணி 27 ஓட்டங் களை மாத்திரமே பெற்றுக் கொண் டதால் சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணி 61 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. குருநகர் ஜே எ சி அணி சார்பில் அதிகபட்சமாக வெஸ்லி ஆட்டமிழக் காமல் 12ஓட்டங்க ளைப் பெற்றார். களத்தடுப்பில் சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணி சார்பில் 2 இலக் குகள் வீழ்த்தப் பட்டன. ஆட்ட நாயகனாக சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணியின் யுஷா ந்தும்தொடர் நாயகனாக சங்கானை கிங்ஸ் ஸ்ரார்ஸ் அணியின் சூரியும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடற் கல்வி ஐக்கியம் அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் அணியும்

மாலை 4.30 மணிக்கு நடை பெறும் போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து யாழ்.சென்.மேரிஸ் அணியும் மோதவுள்ளது.

➤➤➤➤➤


தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் லிக்கு மட்டும் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடத்தும் போட்டியில் அராலி பாரதி அணியை எதிர்த்து அராலி எ.எல் அணியும் மற்றும் மாவட்ட ரீதியில் நடத்தும் போட்டியில் இன்று மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது. (க)

➤➤➤➤➤

கலைஒளி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தின் அனுமதியுடன் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டி கலைஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகமும் இரவு 7.30 மணி க்கு நடைபெறும் போட்டியில் நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து மட்டுவில் ஞானதீபம் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணி க்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மல்லாகம் நியூவேரியஸ் விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது.(க)

# வைகறை விளையாட்டு கழகத்தின் 10வது ஆண்டு நிறைவு தாச்சிப் போட்டி

## சாந்தை விநாயகர் சம்பியன்

வைகறை விளையாட்டுக் கழ கத்தின் 10வது ஆண்டு நிறைவு தாச் சிப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் சம்பி யனாகியது. தாச்சிப் போட்டியில் இறு திப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக த்தை எதிர்த்து உடுவில் சிந்து விளை யாட்டுக் கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பான போட்டியில் 9:2 என்ற புள்ளி அடிப்படை யில் பண்டத் தரிப்பு சாந்தை விநாயகர் விளை யாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தி னராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்






ஆவரங்கால் சமுர்த்தி வங்கி சங்கத்தால் வருடப்பிறப்பினை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு விழா பத்தமேனி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடைபெற்ற போது...

# பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தொழில்நுட்ப துறை மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

2015ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் தொழில்நுட்பத் துறையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சில தகவல்களை யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமி குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரேரணையையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சிபாரிசினையும் ஏற்றுக் கொண்ட உயர் கல்வி அமைச்சர் 20.03.2016ஆம் திகதி வெளிந்த அரசாங்க வர்த்தக மானிய அறிவித்தலின் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 10ஆவது பீடமாக தொழில்நுட்பப் பீடத்தினை பிரகடனம் படுத்தியுள்ளார்.

இப்பீடம் பொறியியல் தொழில்நுட்பத் துறை, உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்துறை, இணைப்பாடங்களுக்கான துறை என மூன்று துறைகளை உள்ளிடக்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பப் பீடம் கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம் என்பவற்றுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்படவுள்ளமை சிறப்பான அம்சமாகும்.

2015ஆம் ஆண்டு ஆவணியில் உயர் தரப் பரீட்சையில் தொழில்நுட்பத்துறையில் தோன்றிய மாணவர்களில் இருந்து முதற் தொகுதி மாணவர்கள் 2016ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இம்மாணவர்களுக்கான முதலாம் வருட பட்டதாரி கற்கைநெறிப் பயிற்சியினை வழங்குவதற்கு தேவையான அடிப்படை உபகரணங்கள், விரிவுரையாளர் ஆளணி என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் பொறியியல் தொழில் நுட்பத்துக்கும், உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்துக்கும் என தலா 100 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.


பொறியியல் தொழில்நுட்பத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள் நான்கு வருட கற்கை முடிவில் கட்டிட நிர்மாணத் தொழில்நுட்பம், மோட்டார் வாகன தொழில்நுட்பம், இலத்திரனியல் தொழில்நுட்பம் ஆகிய கற்கைநெறிகளில் ஒன்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்று இளமாணிப் பட்டத்தைப் பெறலாம்.

உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள் நான்கு வருட கற்கைமுடிவில் உணவு உற்பத்தி தொழில்நுட்பத்தில் அல்லது வர்த்தக பசுமை விவசாயத் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டத்தைப் பெறலாம்.

இனிவரும் காலங்களில் மேலும் சில கற்கைநெறிகளில் சிறப்பு தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடமானது இலங்கையில் உள்ள ஏனைய தொழில்நுட்பப் பீடங்களால் உருவாக்கப்படும் இளமாணிப் பட்டதாரிகளுக்கு நிகரான பட்டதாரிகளை உருவாக்கத் தனது முழுக் கவனத்தையும் செலுத்தும் என்பதில் உறுதி பூண்டுள்ளது என யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீடாதிபதி பேராசிரியர் அறிவித்துள்ளார். (செ)

# சுப்பர் ஸ்டாருடன் ரஞ்சன் செல்பி



இலங்கையின் முன்னணி சிங்கள திரைப்பட நடிகரும் அமைச்சருமான ரஞ்சன் ராமநாயக்க தென்னிந்திய சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை சந்தித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள ரஜனிகாந்தின் இல்லத்திற்கு நேற்று சென்ற ரஞ்சன் ராமநாயக்க, அவரை சந்தித்து செல்வி புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டுள்ளார்.

தென்னிந்திய சினிமாவின் சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்தை சந்தித்ததை மகிழ்ச்சியாக இருப்பதாக ரஞ்சன் ராமநாயக்க தனது டுவிட்டர் மற்றும் முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## தீர்வுத்திட்ட...

தாஸ் தலைமையில் அரசியல் உபகுழு இணைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி புவிதரன் மற்றும் அரசியல் உபகுழு உறுப்பினர்களான சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல், கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சட்டத்தரணி விஜயகுமார் மற்றும் சட்டத்தரணி காண்டிபன் ஆகிய ஐவர் கொண்ட குழுகாலை 11.00 மணியளவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் விவகார பொறுப்பாளர் போல் கொட்விரியிடமும் பின்னர் மதியம் 1.15 மணியளவில்பிரித்தானிய தூதுவராலய அரசியல் பொறுப்பாளர் டானியல் பெயின்டர் அவர்களிடமும் தீர்வுத்திட்ட முன்மொழிவை நேரடியாக கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களுக்கும் இவ்அரசியல், இராஜதந்திரிகளிற்கும் இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பேரவை உறுப்பினர்கள், இது வரைகாலமாக தமிழ் மக்கள் எதை தமக்கு தீர்வாக எதிர்பார்கிறார்கள் என்ற ஒரு தீர்க்கமான திட்டம் உருவாக்க எவரும் முன்வராதது மட்டும் இன்றி எவரும் அவர்களைக கேட்காததாலும், தமிழ்மக்களின் இழப்பை எவரும் சரியாக கண்டுகொள்ளாததாலும், தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வரும்வேளையில், இதுதான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு என மக்கள் கலந்துரையாடல் மூலம்ஒரு திட்டம் உருவாக்கி அதனை சர்வ தேசத்திடம் சமர்ப்பித்து, இத்தீர்வுத்திட்டம் எமக்கு முழுமையாக பெற்றுத்தரும் சந்தர்ப்பத்தில் மட்டும் தான் தமிழ் மக்கள் தமது சுயகௌரவத்துடனும், சம உரிமையுடனும் வாழமுடியும் என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினர். (செ)

## மகிந்தவை...

ன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, ரணில் - மைத்திரியின் தற்போதைய அரசாங்கம் நல்லாட்சியா? அல்லது பேயாட்சியா ? என்று தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இதில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இங்கு தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,

முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை மே தினத்திற்கு பின்னர் குறைக்கவும் இராணுவத்தை அகற்றவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கூட்டு எதிர் கட்சி என்ற வகையில் இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். நாட்டின் ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளை போன்று மகிந்த ராஜபக்ஷவை கணிக்க முடியாது. 30 ஆண்டுகால பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து முழுமையாக இல்லாதொழித்தார்.

இது ஜே.ஆர்.ஜயவர்தனவிற்கோ, சந்திக்காவிற்கோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவிற்கோ செய்ய முடியாமல் போன விடயம் . இந்நிலையில் தப்பித்து வெளிநாடுகளில் தஞ்மடைந்துள்ள புலிகளும் புலி ஆதரவாளர்களும் மஹிந்த ராஜபக்ஷவை பழி வாங்குவதற்காக காத்திருக்கின்றனர் என அவர் தெரிவித்தார். (செ-12)

## பிரபாகரன்...

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியும் விளையாட்டுதுறை அமைச்சருமான தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ், சிங்கள மக்களின் மனங்களை வெற்றிகொண்டுள்ளார். ஆனால் தற்போது அந்த நல்லிணக்கதை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் செயற்பாடுகள், பிரபாகரன் துப்பாக்கியால் செய்ய முயன்ற மாற்றத்திற்கு நிகரானவையாக அமைந்துள்ளன.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் அரசாங்கத்தை அதிருப்தியடைய வைத்துள்ளன. எனவே அவர்களின் செயற்பாடுகளுக்கு எமது அதிக பட்ச எதிர்ப்பை வெளியிடுகின்றோம். இதனால் முழு அரசாங்கமும் அதிருப்தி அடைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## முன்னாள்...

துத் தெரிவிக்கும் போதே சுமந்திரன், இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாங்கள் அரசாங்கத்தைச் சந்தித்தமையால் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் எந்த கைதுகளும் இடம்பெறவில்லை. சந்தேகத்தில் பேரில ஒருவர் கைது செய்யப்படலாம். ஆனால் அதற்குரிய காரணம், கைது செய்யப்படுவர்களின் உறவினர்களுக்கு எழுத்து வடிவில் வழங்கப்பட வேண்டும். மீண்டும் இங்கு கடததல்கள் இடம்பெறுவதை ஏற்கமுடியாது எனத் தெரிவித்தார். (செ-12)

## தனி மாநிலம்...

ங்களை மறந்து, சிங்கள மொழியைக் கற்றுக்கொண்டு அனைவருடனும் இணைந்து வாழக்கற்றுக்கொள்ளுமாறு முன்னாள் போராளிகளுக்கு அமைச்சர் அறிவுரை கூறினார்.

புனர்வாழ்வு பெற்று சமூகமயமாக்கப் பட்ட முன்னாள் போராளிகள் 34 பேரை கல்விச்சுற்றுலா நோக்கில் புனர்வாழ்வு அமைச்சு கொழும்பிற்கு அழைத்து வந்துள்ளது. முன்னாள் போராளிகளை நுவரெலியா, கண்டி, கேகாலை ஆகிய பகுதிகளுக்கு அமைச்சு அழைத்துச் சென்றதோடு நேற்று பத்தர முல்லையிலுள்ள எங்கள் கிராமம் என்ற பகுதிக்கும் அழைத்துச் சென்றது. இந்த நிகழ்வில் இராணுவ உயரதிகாரிகள், மீள் குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் சுவாமிநாதன்,வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து மாநிலமொன்றை உருவாக்க வேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்க நான் விரும்பவில்லை. எனினும்வட,கிழக்கு இணைப்பு மற்றும் மாநிலங்கள் அமைப்பு போன்ற விடயங்களைக் கூறி, தமிழ்-சிங்கள மக்களிடையே மீண்டும் பிரிவினையை ஏற்படுத்து வதற்கு இனவாதிகள் வழியேற்படுத்தக் கூடாது. முன்னாள் போராளிகள் கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்து, சிங்களமொழிகள் உள்ளிட்ட பிற மொழிகளையும் கற்றுக் கொண்டு ஒன்றாக கலந்து வாழ வேண்டும் என்றார். (செ-12)

## பொது எதிரணியினருக்கு...

கும் கொழும்பு மேலதிக நீதிவான் இடைககால தடை யை விதித்துள்ளார்.

அனைத்து ஊழியர் சங்கங்களையும் ஒன்றிணைத்து மே தினக் கூட்டத்தை பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நடத்திக் காட்டுமென அக் கட்சியின் ஏற்பாட்டாளர்கள் அண்மையில் குறிப்பிட்டிருந்தனர் என்றும் மேற்படி தடை உத்தரவானது அவர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ராமல் சிறிவர்தன நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்திருந்தமையினாலேயே குறித்த உத்தரவை நீதிபதி இரு தரப்பினர் மீதும் பிறப்பித்துள்ளார். (செ-12)

## வேலணை கோட்டத்தின் ஏற்பாட்டில் குருபூசை விழா

(வேலணை)

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தையொட்டி எதிர்வரும் மே மாதம் 3ஆம் தகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் குருபூசை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் காரைநகர் இந்துக் கல்லூரி ஆசிரியை செல்வி சிவரூபி நம சிவாயம் நாவுக்கரசரின் வாழ்க்கை மாண வர்களுக்குத் தரும் வழிகாட்டல் என்ற பொரு ளில் சிறப்புரை ஆற்றுவார்.

குருபூசை தின ஏற்பாடுகளை வேலணை கோட்டக்கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## காதலின் சாரல்கள்; வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காதலின் சாரல்கள் எனும் தலைப்பில் நீபோன பின்னால்... மற்றும் ராசாத்தி என்ற 2 காணொளிப்பாடல்களின் இசை வெளியீட்டு விழா இன்றைய தினம் மாலை 3 மணி முதல் 6 மணிவரை யாழ் எச்.என்.பி மெட்ரோ கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எச்.என்.பி யாழ்.மெட்ரோ கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஓய்வுநிலை ஆய்வுப்பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி தி.வேல் நம்பி, எச்.என்.பி. வடமாகாண பிராந்திய முகாமையாளர் க.இந்திரவாசன், யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரகுராம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (செ-9)

## புதிய முகவரியில் வங்கி அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் இல.112, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வந்த 2ஆம் கிளை எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 86, சாயி கோட்டம் நாவலர் வீதி என்ற முகவரியில் ஏ.ரி.எம் இயந்திர வசதியுடன் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தில் இயங்கவுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு சிறுவர் அலுவலகள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளதுடன் அன்றையதினம் புதிய கட்டிடத்தை வைபவ ரீதியாக திறந்து வைக்கவும் உள்ளார். (செ-11)

## ஆணின் சடலம்...

ஒன்று மிதப்பதாக நண்பகலளவில் பொது மக்களிடமிருந்து வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் ஒன்று வழங்கப்பட்டது.

அப்பகுதிக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட பொலிஸாரிடம தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து காணாமல் போன வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபரின் சடலமாக இது இருக்கலாம் என அங்கிருந்தவர்களால் கூறப்பட்டது.

எனினும் சடலத்தைக் கரைக்கு கொண்டு வந்த போது அது அவரின் சடலம் அல்ல என அவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சுமார் 47 வயது மதிக்கத்தக்க அவ் ஆணின் சடலம் நீல நிற சாரம் அணிந்து காணப்படுவதுடன் கறுப்பு நிற ரீசேட்டும் காணப்படுகிறது. கறுப்பு நிற ரீசேட்டில் வெள்ளை நிறத்திலான ஆங்கில எழுத்துக்களும் சிவப்பு நிறத்தில் 56 என்ற இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(செ-60)

## மோடியின் அழை...

ளாதார தொழில்நுட்ப உடன்படிக்கைக்கான வரைபு தயாராகிக் கொண்டிருக்கின்ற நிலையில் ஜனாதிபதி புதுடில்லி விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

நீங்கள் தொழில் தேடுபவரா?
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் பயிற்சி மற்றும் உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
3 - 4 மாதங்களில் உங்களாலும் முடியும்
• கற்கைநெறி சான்றிதழுடன் பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.
• தனிமனித ஆளுமை மற்றும் ஆங்கில பேச்சுத்திறன் விருத்தி.
• வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
Scholarships Available
கற்கைநெறி ஆரம்பம் 09th May 2016
அனுமதிகளுக்கு: 077 3616 798 021 222 0011
முழு விபரங்களுக்கு www.sikaram.lk
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

## இலங்கையுட...

அமெரிக்க வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்படிக்கை குறித்த கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கைக்கு தொடர்ச்சியான வகையில் ஒத்துழைப்புக்களை வழங்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை மக்களுக்கு சமூக பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உறுதுணையாக செயற்பட விரும்புகிறது.

2015-ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் இலங்கையில் பல்வேறு சாதக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெற்று 16 மாதங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

எனினும், நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு உண்டு.

நல்லாட்சியை ஏற்படுத்தவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இன்னும் அரசாங்கம் பாரியளவு கருமங்களை தொடர்ந்தும் ஆற்ற வேண்டும் என சமந்தா பவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## எனக்கு எதிரா...

மீது குற்றம் சுமத்தியிருந்தது.

எனினும் தமக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்திற்கு விஜயம் செய்திருந்த போது, உதயங்க வீரதுங்கவை சந்தித்திருந்தமை பல சர்ச்சைகளை உருவாக்கியிருந்தது.

இந்நிலையில்தன்மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏதேனும் இருந்தாலும் அது குறித்து விசாரணை நடத்த உக்ரைன் அரசாங்கத்திற்கு முழு அளவில் வசதியிருப்பதாகவும், இலங்கை அதில் தலையீடு செய்ய வேண்டியதில்லை எனவும் உதயங்க வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-12)




## புதைகுழி தோண்டு...

சுகாதார அமைச்சிடம் கையளிக்கவுள்ளதாகவும், அதனை சுகாதார அமைச்சு நிதி அமைச்சு மூலம் நடைமுறைக்கு கொண்டு வர இருப்பதாகவும், குறித்த செயற்பாடு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதன் பின் மனித புதைகுழியை தோண்ட முடியும் என சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் வைத்தியரட்ன மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு நேற்றைய தினம் கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழிக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மர்ம கிணறு தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் யூன் மாதம் 6 திகதி வரை மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா ஒத்தி வைத்துள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு சற்று தொலைவில் அடையாளம் காணப்பட்ட கிணற்றை தோண்டுவது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து மாலை 1.45 மணியளவில் குறித்த புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த வழக்கு விசாரணைகள் குறித்து காணாமல்போனவர்களின் குடும்ப உறவுகள் சார்பாக கலந்து கொண்ட சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி வழக்கின் பிரகாரம் ஏற்கெனவே மன்னார் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக இன்று (நேற்று) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் நீதிமன்றத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டிருந்ததோடு,ஏற்கெனவே அழைக்கப்பட்ட அரச திணைக்களங்கள் 13இன் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்ததோடு படைத்தரப்பினர், திணைக்கள அதிகாரிகள்,சட்டத்தரணிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கண்டுபிடிக்கப்பட்ட கிணறு தோண்டுவது குறித்தும்,அதன் நடைமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. குறித்த கிணற்றை தோண்டுகின்ற போது தேவைபடுகின்ற நிதியினை பெற்றுக்கொள்ளுவது எப்படி மற்றும் தோண்டுவதற்கான இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல், தோண்டும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விரிவாக் கலந்துரையாடப்பட்டது.இதன்போது சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் வைத்தியரட்ண குறித்த கலந்துரையாடலில் சில முக்கிய விடயங்களை முன்வைத்தார்.

இதுவரை காலமும் மனித புதைகுழி தோண் டுவதற்கான நடைமுறைகள் எவையும் இல்லை என்றும்,தான் குறித்த நடைமுறைகள் சம்மந்தமாக மனித புதைகுழி தோண்டுவதற்கான ஒழுங்கு விதி ஒன்றை வரைந்துள்ளதாகவும்,

குறித்த ஒழுங்கு விதிகளை சுகாதார அமைச்சிடம் கையளிக்கவுள்ளதாகவும், அதனை சுகாதார அமைச்சு நிதி அமைச்சு மூலம் நடைமுறைக்கு கொண்டுவர இருப்பதாகவும்,குறித்த செயற்பாடு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதன்பின்மனித புதைகுழியை தோண்ட முடியும் என வைத்தியர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கை விசாரணை செய்த மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா குறித்த புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணையினை மீண்டும் எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மேலும் தெரிவித்தார்.(செ-4)

சிங்கள வகுப்புக்கள்
எழுத, பேச, வாசிக்க அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். O/L, அரச உத்தியோகஸ்தருக்கான பரீட்சைக்கு ஏற்ற வகையில் கற்பிக்கப்படும். பிரிவு II க்கான வகுப்புக்கள் ஆரம்பம் 30.04.2016 (1 Pm)
தொலைபேசி இல :-
021 222 8148
021 568 9477
077 846 9721
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-4460)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மரண அறிவித்தல்



திருமதி
**செல்வராசா புவனேஸ்வரி**
(சின்னக்கிளி)

நயினாதீவு ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா புவனேஸ்வரி (சின்னக்கிளி) நேற்று (29.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முள்ளிவீதி, அரியாலை.
077 895 2391, 021 221 1284

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-4468)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**கந்தையா தர்மகுலசிங்கம்**
யா/செங்குந்தா இந்துக்கல்லூரி
[அதிபர்]

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உயர் பண்புகளோடு தன்னலமற்ற சேவையாற்றி மணிவிழாக்காணும் அதிபரை எல்லா நலனும் பெற வாழ்த்துகின்றோம்.

(C-4470)

வாழ்த்துவோர்:- நல்லூர்க் கோட்ட அதிபர்கள் சங்கம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.